[illegible]
V2. No. 12 21 March 19

SL
ma211, N28KA
N29.2.12

189047

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

OFFICE OF THE R... 1929 ... MA...

Vol 2.] 1929 ஞூ மார்ச்சு மீ 21உ [No. 12.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 221
2. மரகதத் திளவரசன் (A Novel)
T. N. சேஷாசலம் B. A., B. L 223
3. வில்லி பாரத விளக்கம்
T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L. 225
4 அப்பர்
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 228
5. தமிழ்ப் பாடம் 231
6. "அலகிலிவ் விளையாட்டுடையான்"
V. நாராயணன் M.A., M.L. 233
7. குலசேகரர்
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 234
8. வர்த்தமானம் 239

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது. மாநேஜர்.

## கலாநிலயம்

18904 / 18808.

### கலைகளே கதி.

### V

"கலாநிலயத்தில் கலைப்பழக்கந் தவிர நாட்டுத் தொண்டு நலத்தொண்டு உரிமைத்தொண்டு முதலியன மறக்கப் பெறுகின்றனவே. கலையிற்பழகித் தினைத்தேனும் நடத்தையில்நேர்மையிலரே. அதன் காரணம் என்னவோ! கலையறியாதாரிற் பலரே (பாமரர்) நிலைகுலையாது வதிகின்றனரென நாடோறும் உணர்தற் கியலுகின்றது. இன்னவித கருத்துக்கள் முரண்பாட்டை யெமக்கு விளைவிக்கின்றன"

என்று எம்மைப் பரிவுடன் வினவிய நண்பருக்கும் அவரனைய ஐயப்பாடுடையராய் இருக்கக்கூடிய ஏனையோர்க்கும் இக்கலாநிலயத்தின் கருத்தும் செயலும் அமைந்துள பான்மையின் உண்மையைச் சங்கையற விளக்குமாறு சென்ற நான்கு தலையங்கங்களில் முயன்றுவந்தோம். அம்முயற்சியினிடையே, நாட்டுத் தொண்டு நலத்தொண்டு உரிமைத்தொண்டு இன்னும் இவையனைய தொண்டுகள் என்ற பெயரோடு இக்காலம் நடைபெறுகின்ற இயக்கங்கள்பல அந்தரம் நோக்கின் பயன்பெரிது அளிக்காதிருக்கின்றனவென்று பிரசித்தமாயிருப்பதைக் காட்டித் தற்காலம் அநுசரிக்கப்பெறுகின்ற முறைகளையே கையாண்டு எத்துணை ஊக்கத்தோடு முயன்றுபார்த்தாலும், நினைத்த நலம் எய்துதல் இயலாது என்பதை வற்புறுத்தி அதற்குக் காரணமும் கூறினோம். தொண்டு செய்யும் தூய சிந்தனையேனும் தொண்டுபுரிவோர் பெருமையையேனும், உலகத்தின் நன்மைக்காகச் சிலர் சில கருமங்களை ஆற்றவேண்டுவதின் அவசியத்தையேனும் கலாநிலயம் மறக்க எந்நாளும் நினைத்ததில்லை என்பதை மீண்டுமிங்கு நாம் எடுத்தியம்புதல் மிகையாம். தொண்டெனும் பெயரால் இன்று ஆற்றப்பெறுகின்ற சில காரியங்களையும், அக்காரியத்தின்பொருட்டுக் கையாளும் சில முறைகளையும், இம்முறைகள் தீதன்றி நன்மைதரவல்லவோ என்றும் கலாநிலயம் பலதரம் பல துறைகளில் ஆழ்ந்து அயிர்ப்பதுண்டு. அவ்வளவே.

இதன்பின், கலை கல்வி என்னுமிச்சொற்களைக் கலாநிலயம் எப்பொருளில் ஏற்று விவகரிக்கின்றதென்பதை விளக்கிவைத்தல் இன்றியமையாததாயிற்று. காவியம் ஓவியம் நடனம் சிற்பம் சங்கீதம் போன்றனவாய் மனத்தைப் பண்படுத்தும் நுண்கலைகளை, அவைதமை அநுபவித்தலின்றி வேறொரு பயன் கருதாமல் பயில்வதே கலைப்பயிற்சியென்றும், அவைகளைக் கற்பதே கல்வியெனத்தகும் என்றும், மற்றச் சாத்திரங்களும் சாதனங்களும் தத்தம்வரையிற் சிற்சில உபயோகங்களுக்குரியனவா யிருந்தபோதிலும் இன்னவைக

ளிற் றேர்ந்தோர் கலாநிலயங் கண்ட பொருளில் கற்றவர் என்ற நிலைமைக்கு உரியவராகமாட்டாரென்றும் பன்முறை இப்பத்திரிகை பகர்ந்துளது. இந்தப் பாகுபாட்டினைச் சார்ந்து ஆராயுங்காலையில் கலையுணர்வில் முதிர்ந்தோர் நேர்மைபிறழ்ந்த நடத்தையரா யிருத்தலருமை என்னும் தன் கொள்கையைக் கலாநிலயம் குறிப்புணர்த்தி, இக்காலம் கல்வியெனும் பெயரால் தோன்றித்திரிகின்ற பல போலித்துறைகளிற் பயின்றோரைக்காட்டிலும் பாமரர் என்று கருதப்படுவோரே தம்நிலை குலையாது வதிதலும் புதுமையன் றென்பதையும் விரித்துரைக்கலாயிற்று.

இந்தக் கருத்துக்களின் உண்மையை உணர்தற்கு மானுட வாழ்க்கையின் தத்துவத்தைத் தேர்ந்துகொள்ளல் மிகவும் அவசியம். அரசியல், தனாதாயம் வரத்தகம் முதலிய துறைகளிலும், ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள் தொழிலைச்சேர்ந்தவர்கள் அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்கள் முதலாயினோரும், மாதரார்களும், 'முன்னேற்றம்' அடைதற்கு முயலல்வேண்டும் என்னும் நினைவோடு தோன்றி, இந்நாள் இவ்விந்திய தேயத்தில்மாத்திர மன்றி வேறெங்குமே, பயின்று நடமாடுகின்ற இயக்கங்கள், ஒற்றுமையை உறுவித்து உலகத்தை ஒன்றுபட இணைப்பதற்கு உதித்திருப்பதாய் உரைக்கின்றனவேனும், உள்ளாழ்ந்து அவைகளின் அந்தரங்க நோக்கங்களையும், அந்நோக்கங்களை நிறைவேற்றுதற்கு அவை விளம்புகின்ற வாசகங்களையும், புரிகின்ற செயல்களையும், நுணுகி ஆராயுங்காலையில் அவைகள்தாம், மனிதனுக்குமனிதன் வகுப்பிற்குவகுப்பு சாதிக்குச்சாதி தேயத்திற்குத்தேயம் தனது தனதென அவரவர் இலாபத்தை வேறுவேறாகப் பிரித்து விவகரிக்கின்ற பொய்வாழ்க்கைச் சிந்தனைக்கு ஆதாரமா யிருக்கின்றபரிசு தெள்ளிதின் புலப்படும். இவ்வியக்கங்களிற் பல வாய்ப்பேச்சிற்குத் தூய்மையாய்த் தோன்றிய போதிலும் ஒருபுற மல்லாக்கால் ஒருபுறம் லோகாயத மனப்பான்மையைத் தழுவி நிற்கின்றன. எனவே இவ்வியக்கங்கள்வலுக்கவலுக்கத் தொண்டாற்றுவோர் படையும் பிரிந்துபிரிந்து திரள்கின்றது. ஒற்றுமைக்குழைப்போர் உழைப்பெல்லாம் உட்புகுந்து பிளவையே பெருக்கி அகற்றக் காண்கின்றோம். தர்மமும் தூய்மையும் போதிப்போர் போதிப்பாராலும்அவை, தர்மத்திற்கும்தூய்மைக்குமாகவே மாத்திரமல்லாமல், வேறு சில இலாபத்திற்கு ஆதாரமாய் விவகரிக்கப்படுகின்றனவாகையால் எப்பக்கந் திரும்பினும் கொள்ளையும் கொலையும் வஞ்சனையும் சுயநயப்பேயின் தலைவிரிகோலமுமே நாளுக்குநாள் அதிகரிக்கக் காண்கின்றோம். செல்வப் பெருக்கிற்குச் சாதனங்கள் தேடத்தேட வறுமையே வட்டமிடுவதைக் காணாதார் ஒன்றுங் காணாதாரே.

இத்துணைக்குங்காரணம், கவிஞர்பெருமான் இரவீந்திரநாதர் கூறியபடி நிகிலப்பொருள்களினின்று நம்மை வேறாகப் பிரித்துக்கொள்கின்ற பொய்வாழ்க்கையே என்பதற்கு எள்ளளவேனும் ஐயமுளதோ. 'ஓம்' என்னும் அப்பிரணவப் பொருளிற்கு இணங்கிய வாழ்க்கையில் அமிழ்ந்து திளைத்துத் தன்னையும் தனதுணர்வையும் பிரபஞ்சமயமாக்கிக் காலத்தால் தேசத்தால் கைப்பொருளால் பேதிக்கப்படாமல் நிரந்தர நினைவில் நிலைநிற்கின்ற பெருவாழ்வை மானுடர்க்குப் பயக்குவிக்கும்இயக்கமொன்று இருக்கஇயலுமாயின், அதன்பொருட்டு இயற்றவல்ல தொண்டொன்றுதேர்வோமாகில், அவ்விபக்கம் ஒன்றே அத்தொண்டொன்றே அழியாத சாந்தியை உலகத்திற்கு அளித்து மாந்தரைஉய்விக்க ஏற்றதொருமார்க்கமாகும். இஃதன்றோ மெய்யுணர்வால் கைகண்ட நல்வாழ்வு. மற்றவெலாம் மாயவாழ்க்கை. மனத்தைப் புண்படுத்தி மண்ணொடு மடியச்செய்யும் கொடியதோர் கூற்று. மாத்யூ ஆர்னால்ட் அனைய மேனாட்டு அறிஞரும் வகுத்தவண்ணம் நமன்வாயின் களிக்கின்றோம் நாம். இவைகளைச் சென்றவாண்டு வரைந்த 'சொல்வோரிற் கேட்பவர் அருமை' என்னுந் தலையங்கங்களில் இரவீந்திரநாதரைப் பின்பற்றி விரித்துரைத்துளோம் ஆதலால் அன்னதனை நம் நண்பர்கள் ஈண்டெடுத்து ஓதிக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இனி, அந்நல்வாழ்வினை எய்துமாறு எவ்வாறு என்னுங்கேள்வி எஞ்சி நிற்கின்றது. மெய்வாழ்க்கைஇன்னதென்றே ஒருபோதும் அறிந்திராதார் பலர் இந்நாள் இருக்கின்றனரெனினும் அதனை அறிந்துள சிறுபகுதியோருள்ளும் ஆர்வத்தோடு அவ்வாழ்வுதன்னை வாழ்வதற்கு இசைவோர் பின்னுஞ்சிலர். இது விருப்பமின்மையா லன்று. தம்மையும் தம் மனத்தையும் உணர்வையும் பிரபஞ்சத்துட் பரவவிட்டு மீண்டுமப் பிரபஞ்சத்தைத் தம்முளே தரிசிக்க விரும்பினால்மாத்திரம் போதாது. நமது கைகளால் சில கருமங்களைச் செய்யவேண்டுமெனின் அதற்கு ஆசையோடு மாத்திரம் அமையாமல் பயிற்சியும் பெரிது வேண்டுமென்பதை யாவரும் அறிவர். அவ்வாறே மனத்தினால் ஒன்றைச் சாதிப்பதற்கும் கைத்தொழிலைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான பயிற்சி இன்றியமையாதென்பதை அனேகர் மறந்து விடுகின்றனர். இப்பயிற்சியைக் குறித்தே நம்நாட்டு மூதறிவாளர், கர்மமார்க்கமென்றும் பக்திமார்க்கமென்றும் யோகமார்க்கமென்றும் ஞானமார்க்கமென்றும் நால்விதமார்க்கங்களை ஒன்றற்கொன்று தொடர்புடையனவாய் வகுத்து வைத்தனர். இந்த மார்க்கங்களில் ஒருவனைக் கொண்டுபோய்ச் சேர்த்து அதன்பால் ஈடுபட்டு நிற்பதற்கு முதற் பயிற்சியாய் உதவுவது கலைகளின் பயிற்சியாம். முன்னாட்களில் சான்றோர் நிறைந்து ஆன்மானுபவம் எங்குந் தழைத்தோங்கியிருந்ததற்குக் காரணம் யாவரும் தர்க்க மீமாம்ஸ உபநிடதாதி நூல்களைக் கற்கப்புகுமுன் காவிய நாடக அலங்காராதி கலைகளிற் பயின்றிருந்த முறையின் பெருமையேயாம் எனப் பெரிதும் ஐயம் இன்றி உரைப்பதற்கியலும். இந்நாள் கர்மமாதி மார்க்கங்களும் உபநிடதங்களின் உண்மையும் பெரும்பான்மை ஏட்டுச் சுரைக்காயாக உதவாதிருப்பதும் மெய்யாய கலைகளின்பால் பயிற்சி குறைந்தமையாலேயே நேர்ந்துளது. ஏனெனில், கலையுணர்வு ஒன்றே மனத்தைப் பண்படுத்திச் செப்பனிட்டு வைக்க வல்லது. பண்பட்ட புலத்திலேதான் வித்து விளையும்.

இனிக் கலைகள் மனத்தைப் பண்படுத்துவது எங்ஙனம் என்பதை அடுத்தவாரம் நாம் உரைப்பதோடு இவ்வரிசைத் தலையங்கங்கள் முடிவுபெறும்.



OFFICE OF THE RE... 1929

# ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

## 2. மார்க்கட நாடகம்

209பக்கத் தொடர்ச்சி.

தாழையின்மடலில் பஞ்சரவல்லி வரைந்தனுப்பிய செய்திக்குமேல் நிகழ்ந்தன எவையும் வாசவன் அறிந்திலன். இந்நிருபத்தை அவன் அரசனுக்குக் காட்டியதும், பின்மன்றல் நின்றுபோயதும் காரணகாரிய முடிபென்பதுவரையில் அவனுக்குத் தெரியும். அவ்வாறே, 'மண்ணை நச்சிப் பெண்ணைப் பகரும் இவ்வவலச் சூழ்ச்சிக்கு ஆளாகேன்' என்று அவள் மறுத்ததுமுதல் புஜங்கன், தந்தைமாட்டு அடாத நினைவுகள்புகட்டிச் சிங்காதனத்தைக் கவர்ந்திடத் தூண்டிவந்ததிலிருந்து அவனது உட்கருத்தை வாசவன் ஒருசிறிது ஊகித்துள்ளான். தனது மகள் மீது இளவரசனுக் கமைந்த காதலே காப்பு என ஓர்ந்து புஜங்கன் அஞ்சாது சொல்லிவந்த துரோகம் பயன்படாது போனது உண்மையே. ஆயினும், இதன் பிறகு வாசவன் தன்னருமைத் தந்தையின் திருமுகத்தை எதிர்நோக்க நாணிக் கூசினான். "கரவுடைய நெஞ்சினேன் இந்த ராஜதுரோகத்தைத் தந்தையிடம் தெரிவிக்கத் திறமில்லாமற் போயினே னன்றோ" என்று எண்ணி எண்ணி ஏங்குவான் அவ்விளவல். "ஈதறிந்தால் சிங்கமுகன் புஜங்கனது தலையைக் கொய்திடல் திண்ணம். ஆயின் பஞ்சரவல்லி தன் பிதாவைக் காட்டித்தந்த பாதகனுடன் மணம்பொருந்த இயைவளோதான்!" என்றொருபோது அயர்வான். "இல்லையேல் நானுரைக்காமலே இச்செய்தி அரசனது செவிக்கு எட்டுமாயின், சும்மாவிருந்த பான்மையால், ஐயையோ, நானுமிச்சதிக்குச் சமயமே பார்த்திருந்தேன் என்றல்லவோ அயிர்ப்பது மாகும்!', எனத் திகைத்திடுவான் மறுபோது. "அல்லாக்கால், நான் தாழ்வதற்குத் தரியாது இக்கொடியோன் கருமத்தைத் தானே கையாளக்கருதி என் கோத்தந்தையைக் கொன்றிட நேர்ந்தாலோ!" என்றென்றிரங்கி இக்காதல் மைந்தன், முதலிடை கடை மூவிடத்தும் கனன்ற கொள்ளியிற்பட்ட எறும்புபோ லாயினான்.

பஞ்சரவல்லியோ தன் நினைவை மறந்திட வாசவற்குப் போதித்துளள். இக்காதலனுக்குத் தானும் தன்னுடலும் நுண்ணுணர்வும் இன்னுயிரும் பிரபஞ்சமடங்கலும் அச்சிற்றிடை மெல்லியல் மடந்தையின் வடிவேயாய் வியாபித்திருக்க, அன்னவளை மறந்தால் நினைப்பதற்குப் பிறிதொன்று எங்குளது! அடவியில் அந்நாள் காதல்கூர் காட்சி நிகழ்ந்தபோது அன்புப் பரவசமான அவ்வேழை இவன் வடிவின் நிழலென்றாள் தன்னை. எனின், நிழலே விரிந்து பொருளை விழுங்கிய புதுமை இது காண்மின்! இவன் குரலின் எதிரொலி தான் என்றனள். ஆயின், அவ்வொலியே திரும்பி முதற்குரலிற்கு ஓங்கார நாதத்தை மீண்டும் தந்தவிதந்தனைக் கேண்மின்! தனதுள்ளக் கோயிலிலமர்ந்த தெய்வ மிவன் என்னவும் துதித்தனள். கோயிலே வளைந்து கடவுளைக் கொள்ளையிற் கொண்டபரிசு ஈண்டு உணர்மினோ உணர்மின்!

மண்டிப்பெருகிய தனது ஆசைக்கு அணைகோலி மனைவியும் மகளும் தடுத்தநாள்முதல் புஜங்கன் அவ்விருவரோடும் முகங்கொடுத்துப் பேசுவது ஒழித்தான். பஞ்சரவல்லியைச் சிறைக்குள் அகற்றியிருந்தும் தன் சூழ்வினை வெளியான வழியை அவன் அறிதற்கியலவில்லை. அசோகவதிதான் அரசனுக்குச் செய்தி யனுப்பியுளாளோ எனச் சந்தேகம் கொண்டான். ஆதலால் அவள்பால் உற்றவெறுப்பு இவனுக்குப் பின்னும் அதிகமாயிற்று. கொழுநனது அருளையும் குமரியினுஉறவையும்ஒருங்கேதுறந்த அவ்வுத்தமி அடைந்த துயரிற்கோ அளவில்லை. ஒவ்வொரு வேளை, நள்ளிரவில், ஒளி இழந்த முகத்தினளாய் வியர்த்த நெற்றியளாய் வெய்துயிர்த்துப் பின்புறம் தொடுத்த கைகளோடும் மண்ணையே கருதிய கண்ணினோடும் முன்னும் பின்னும் முற்றத்தில் திரிதரும் தன் நாயகனைக் கண்டு ஆற்றாளாகி அசோகவதி, அவனருகு மெல்லெனச் சென்று பாதம்பணிந்து வதனந்திருத்தி மெய்தழுவி இளகிய குரலால் "நாதா, பேராசை திறந்த பிலவாய் விழுந்து அமைதிஇழந்தனை. சிறுமியோ இளநலம் குலையச் சிறையுள் செறிந்து குழைகின்றாள். எளியளை வாழ்விக்க வந்தவொரு வள்ளலே, உடலுருகி என்புருகி ஆவி கரைகின்றேன். இல்லற இன்பத்தைத் துறந்தோம். இத்தனையும் துடைத்த நின் மண்மோகம் மாயுமெனில் மூவரும் உய்ந்து மாட்சியும் பெறுவோமன்றோ! பின் நமக்கு இப்புவியில் எடுப்பு யார், இணை யார்! வாசவன் நமக்கு நன்மருகனாய் வாய்ப்பது ஒன்றே போதாதோ!" என்று இன்னபல இணங்கியும் பிணங்கியும் எடுத்தோதி அவனைத் தருமவழியில் உய்க்க முயன்றுவந்தாள். ஆசையெனும் வடவை அழன்ற அவன் மனத்தில் மனைவிமக்களெனும் இயற்கை உணர்ச்சி பொசுங்கிப் பசையற்றுக் கிடக்க மனையறமும் கிளையுறவும், அசோகவதியே தன் கண்ணீர் வார்த்து வளர்த்தாலும், தளிர்ப்பதெங்ஙனம்! வாயும்கையும் சோர்ந்தனள் அவள். தன்செயலால் ஆவதினி யாதொன்றுமில்லையெனத்தேர்ந்து, இல்லுறை தெய்வங்களை இடையறாது பரவித் தன் அகமுடையானுக்கு நல்லெண்ணம் பிறப்பித்து உய்விக்க வேண்டிவேண்டி வழிபடுவாளாயினள்.

பஞ்சரவல்லியின் மனநிலை இதற்கு மாறாக இருந்தது. காவலிற் புகுந்தநாள்முதல் இவள் கருத்தழிந்து தன் தந்தையின் கொடிய ஆசை நசிக்கவும் தனது காதல் கூடவும் கடவுளே அருளவேண்டுமென்று எண்ணித் தன்செயல் எதுவும் சிந்தித்திடாமல் இருந்தாள். தெய்வம் புகுந்து கெடுத்தால் செயல் எங்குளது, என்னும் பான்மைத்தாயது அவள் மனம். ஆனால், மணமுரசின் பேரொலி அவள் செவியில் பட்டவன்று தெய்வத்தையே நம்பியிருந்தால் தீது சேருமேயெனக் கலங்கிப் புஜங்கனது கபடத்தையாகிலும் தடுப்பது தன் கடனென அத்தாழையின் வாளியை விடுக்கத் துணிந்தனள். நினைத்தவாறே அதனால் விவாக கருமமும் நின்றுபோனது அவளுக்குத் தெரியலாயிற்று. இதனின்று தன் முயற்சியால் ஒன்றை விலக்கியதைப் போலவே மற்றொன்றை ஆக்குவதும் கூடும் என்றொரு கருத்து அவளுக்குத் தோன்றியது. "முயற்சியுடையோர்க்கே தெய்வமும் துணைபுரியும் போலும். இனி, என் விதியை யானே கையாள்வேன். தெய்வங்கள் உடனின்று உதவின் உதவுக.

இல்லையெனில் நான் முயலும் முயற்சி விட்டபடியாகட்டும்,'' என்று கருத்துள் கொண்டனள்.

நினைத்ததைச்சாதிக்கும் நெஞ்சுடைய பஞ்சரவல்லி இதன்பின் சும்மா இருக்கவில்லை. சிறைவிட்டு நீங்குவது எவ்வாறு என்பது அவள் முதல்கருத் தாயது. தனக்கெனப் புஜங்கன் அமைத்திருந்த காவலோ கடியது. பலகணிகளெல்லாம் இருப்புக் கம்பிகள் புதைத்தன. அடைத்த கதவிற்கு அப்புறம் காவற் சேவகர் இருவர் சூலக்கையினர் இறையகலாது காத்தனர். இத்தனையும் கடந்து தப்பினாலும் புஜங்கனே மீண்டும் அவளைப் பற்றிச் சிறையுளே புகுத்துவன். ஆயின் தந்தையினது சித்தத்தின்படியே தான் வாசவனை மணம்புரிய இசைந்ததாகப் பொய் ஏதேனும் புகன்று விடுதலைபெற்றா லென்னவென்று ஒருபோது எண்ணினாளேனும் அதையும் அக்கணமே தவிர்த்துவிட்டாள். அது வஞ்சனை யாகும். ஆயின் என்! புஜங்கன் இவள்பால் வஞ்சனை இழைத்ததில்லையோ? கள்ளனுக்குக் கள்ளனே யாகவேண்டு மென்பது கயவர்தம் கொள்கை. வஞ்சனையை வெல்ல வல்லது வாய்மையொன்றே. சிறுமியவ ளாயினும் தூய சிந்தனை யுடையவள். எவ்வாற்றாலும் தன் தந்தையின்பால் பொய்யுரைக்க வெறுத்தனள்.

தீதிலா வொருவழியில் சிறைகடந் தேகப் பஞ்சரவல்லி, ஆதலால், ஆவல்கொண் டிருந்தனள். எனினும் வெளியேறியபின் செய்யவேண்டியது இதுவென அவளுக்கொன்றும் தெளிவுற விளங்கிற்றில்லை. தன்னைப் பயந்தாள் திருமுகத்தைத் தரிசித்து அவளோடு அளவளாவித் தனித்தனித் தம்துயரங்களைச் சொல்லியும் கேட்டும் தேறியும் தேற்றியும் அமைதியுற விழைந்ததோர் அடங்கா வேட்கை அவளுக்குண்டு. அன்றியும் வாசவச் செம்மலின் வயிரத் தோள்களுக்கு உரிய தையலார் வேறுளர் என்றிவள் முன்னமே தெரிவித்திருந்தாளேனும் அது தன் நெஞ்சையே ஓராது வரைந்த உரையேயாகும். மாற்றம் இதை மெய்யெனக் கொண்டு அம்மடமகன் பஞ்சரவல்லியின் நினைவை விலக்கிப் பிறமகளிருடன் மணம் கருதுவானாயினும் அன்னதற்கு அவனை யிவள் பகைத்திடாள், உண்மையே. ஆனால் அதன்பின் இப்பேதை உயிர்வாழ்வதொன்றே அரியதாகும். கோமகன்தன் மெய் பயிலாது, குரல் கேளாது, கண்ணொடு கண்ணெதிர் பருகாது, மொழியிடை மொழிதழுவி ஆர்வச்சொல் மிழற்றாது, நாழிக்கொரு ஊழியாய்க் கழியும் நாட்களைப் போலவே தெரிவைபிவள் ஆவியும் தேய்ந்தது.

பசுவைப் பிரிந்த பைங்கன்றுபோல் ஒரு போதும் கொழுகொம்பு பற்றாக் கொடிபோல் மறுபோதும், மாறிமாறி வாட்டமுற்ற இம்மடந்தையின் அறைதனில் ஒருபகல் புஜங்கனே வந்து அவளெதிர் நின்றான். இவ்வருகையின் கருத்து யாதோவென அவள் எண்ணுமளவில், வந்தவனும் இளகா முகத்தினனாய்ப் "பேதாய், பஞ்சரவல்லி, இனியேனும் உனக்குப் புத்தி வந்ததோ எனக் காணவந்தேன்'' என்றனன். பஞ்சரவல்லி அவனுக்கு முகங்கொடாது, "அப்போது இருந்த புத்தியே இப்போது மிருக்கின்றது'' என்று கூறினளா யருகிருந்தசாளரத் தெற்றியி லமர்ந்தாள்.

"அப்போது இருந்த புத்தியே இப்போதும் இருக்கின்றதாயின், நீயும் எப்போதும் இந்த இடத்திலேயே இருக்க வேண்டியவள்தான்,'' என்று பகர்ந்தனன் புஜங்கன்.

"ஐய, இது கூறவோ இத்தூரம் நடந்தது! எந்தாய், என்பால் எப்பிழை கண்டாய்? நினக்கு வாய்த்தவொரு நன்மக ளல்லளோ நான்! பெண்பெற்றுப் பின் அவள் கண்கலுழக் காண்பது தகவாமோ!''

"மற்று நீ, பெண் பிறந்து என் மனமுழலக் காண்பது அழகிதோ! பஞ்சரா, எனது கருத்திற் கிணங்கி ஒழுகுவது உன் கடன். தந்தையும் மகளும் தனித்தனி மகிழ்வோம்'''

"யாக்கையும் ஆவியும் அலமந்து நான் நின்ற நிலை நோக்கி இச்சோதனை புரியப் புகுந்தனைபோலும். ஊக்கமோ, ஐயா, ஒடுங்கிற்றில்லை. எனது வாய்மையைக் கைவிடேன், உனது ஆசையும் கை கூடாது.''

"கடல் புடைபெயரினும், காற்றொடு தீயும் மூண்டு படரினும், அவ்வானமே முகடொடிதர இடியினும், இப்புவியிலே யான் ஒரு பார்த்திபன் ஆகாது தீரேன், ஆதலால் மகளே......''

"எந்தாய், எந்தாய், இவ்வைம்பெரும் பூதமே சான்றாக எனதுள்ளத்தைப் பிசைந்து நீ இச்சொற்களால் தின்கின்றாய். நீ யளித்த இவ்வுயிரைக் காத்தியென இரக்கின்றேன்.''

"பஞ்சரவல்லி, இச்சொற்சாகசம் என்ன சாதிக்குமென்று எண்ணி மோசம்போகின்றாய். நீயும் உன் தாயும் இரக்கிலென், போய் இறக்கிலென்! நீவிரெல்லாரும் சந்தையிற்கூட்டம். நான் அரசனாவது ஒன்றே சாச்வதம். மனைவிமக்களெனும் வாஞ்சனையெல்லாம் சிங்காதன மேறுதற்கு வகையற்ற மூடவரை வெருட்டும் மருளன்றி வேறொன்றில்லை,'' எனப் புகன்ற புஜங்கன், பற்களைக் கடித்து உதடு அதுக்கித் தீயெழ அவளை விழித்துநோக்க அவள், "ஐய, நின் வெகுளியால் எனக்கு அச்சம்விளைக்க நினைப்பதெல்லாம் வீண்! என்றனள்.

"ஆயின் பஞ்சரா, இதுகேள். உன்னிடம் உரைக்க இதை நான் முன்னர் நினைக்கவில்லை. எனினும், நின் நெஞ்சு அழுத்தத்தால் பிறர்க்குநேரும் தீமையை அறிவாய்......வேந்தனைக் கொன்றிடுமாறு நான் வாசவனை யேவியுள்ளேன். உணர்ச்சியற்ற பதுமை நீ யென்று உணராமல் அம்மதியிலாச் சிறுவன் உன்பாலிருக்கும் மோகத்தால் அப்படுகொலை புரிய முயன்று வருகின்றான். சிங்கமுகனைக் கொன்றிட்ட பாதகனையும் இந்நாட்டுச் சனங்கள் தமக்கு அரசனாக ஏற்பரோதான்! பிறகு அச்சனங்களது சார்புநின்று நான் தூண்டிய கொலையின் பழியை நானே தீர்த்து உன் வாசவனைக் குடிகள்முன் பலியாக்குவேன். அதன் பின் நாதன் அற்ற ஏமாங்கதச் சிங்காதனம் நான் புகுந்து, அரையரசிற்குக் குறைக்கிட்ட நின்னையே வாழ்த்தி, முழுநாடும் ஆள்வேன். இதுவே யுன் சித்தமாயின் பெண்ணே நீ நீடூழி வாழ்க,'' என்று முடியிருக்குமிடம் தேடுவான்போல் புஜங்கன் தன் தலையைத் தடவிக்கொண்டு நின்றான்.

மெழுகின் பாவைபோல் இச்சுடுசொற்களைக் கேட்டிருந்த பஞ்சரவல்லியின் உடல் உருகியதெனவியர்வு பெருகியது. படபடத்து இடித்த தன் மார்புஉடையுமென அஞ்சி அதனைத் தனதிரு கரங்களாலும் பொத்தி நின்றவள் நிற்கஇயலாமல் அக் காதகன்தன் கால்களிற் சாய்ந்து அழுவதாயினள். "வென்றுவிட்டேன் இப்பெண்ணை'', எனப் புஜங்கன் கொக்கரித்துப் "பெண்ணே, பொங்கத்தம் பொங்கோ ஆடிவிட்டனை. இனி நான் சொல்லும்வண்ணம் செய்வாய்.



உனக்கும் நல்லையாய் இவ்வரசனுக்கும் நாட்டிற்கும் நல்லையாய் நீ காட்டிற்கண்ட அக்காதலனுக்கும் நல்லை ஆவாய். அல்லாக்கால், உன்மேல் வைத்த காதலுக்கே அக்கோமகனை இரையாக்கிய பெரும்பாரம் நினதேயாகும்.'' எனக் கூறியவாங்கே அவளை எடுத்து நிறுத்திப், "பஞ்சரா, ஏ, பேதைச் சிறுமி, இன்னுமேன் தாழ்கின்றாய்? ஏமாங்கதத்தின் ஒருபாதி எனதாக நீ வாசவன் மணத்திற்கு இயைந்தனை என்று வேந்தன்பால் சொல்லிவரட்டுமோ?'' என வினவினன். பஞ்சரவல்லியோ சிதறிக்கிடந்த தன் சித்தத்தையெல்லாம் சேர்த்துச் சிறிதுநேரம் சிந்தனையுள் ஆழ்ந்து பின் பகர்வாள், "ஐய, நம் மரபிற்கு ஒவ்வா இவ்வுரை நீ புகலவும் நான் கேட்கவும் புகுந்த இத்தினம் கொடியது. கதியற்றவர்களை வாளால் காக்கவேண்டிய நீ ஒரு பெண்ணை அலமர நாவால் வெருட்டுகின்றாய். அறிவிலாது நான் உன்னுரைக்கு முன் பயந்தேன். எண்ணுங்கால் நகையே வருகின்றது. நின் குலமென்ன கல்வியென்ன குணமுமென்ன வீரந்தான்என்ன, ஆகையால் இச்சொல் நீ சொல்லத்தான் நேர்ந்ததேயல்லாமல் செய்கையால் இப்படுபழி செய்யவோ சிந்தியாய்!''

"குலத்தையும் கல்வியையும் நீ கொண்டாடிப் பயனில்லை. இசையேனோ பெண்ணே, பின் காண்பாய்!''

"பசியுற்றவர் எதற்கும் பின்னிடார். அதனினும் மண்பசி பொல்லாதது. ஆனால் ஒன்று மறந்தனை. என் காதற்கடலில் திரண்ட அமிர்தத்தை, அன்பிற்கு அன்பாய ஆரியனை, வாய்மையின் வைப்பை, வேந்தன் பயந்த அருந்தவத்தை, வாசவப் பெருமகனை யாரென்று எண்ணியோ நின் சூழ்வினைக்குஅடிகோலினாய்! மெய்யினேன் என்மனம் பொய்யுடையொருவனை நாடாது. வாசவன் இக்காரியத்துட்புகான், திண்ணம்!''

"பிச்சியே போ, பெண்மோகம் போமளவு நீயறிந்ததில்லை!''

"மண்மோகம் போகுமளவே இன்று நான் கண்டுளேன். இருப்பினும், ஈன்றோனைக் கோறலால் இவ்விளவரசன் என்னைக் கூடுவதாகும் விதிதான் எங்கு வரைந்துளது!''

"வேந்தன் தன் இரத்தத்தை என் குடங்கையில் ஏந்தியே உன்னைத் தாரைவார்த்துத் தருவேனே யல்லாது, மற்ற நிறமும் சுவையும் இல்லாத நீரிலேயுனை அளித்திடேன் என்று நின் அமிர்தத்திற்கு விரதமொழி சாற்றியுள்ளேன்........நல்லது நங்காய், உன் தர்க்கவித்தை இதனுடன் போதும் நான் போதல் வேண்டும். நீ யுரைக்கு மாற்றமென்ன?''

"ஐய, பெற்றவன் குருதிநீர் வார்ப்பதும், அப்பெம்மான் நிணமாலை சூட்டிப் பழித்தாலி கட்டிப் பெண் கொள்வதும் வெகுநன்று. வலம்வரும் தீயும் எனதரசமாதுலன் ஈமத்தீயோ! வதுவையில் பொருந்துவதும் பாழ்நரகத்திலோ! மண்ணை சுமக்க நீ வகுத்த விதம் வெகுநன்று! அளியள் செய்த தீவினையே அப்பணுகி வந்தாயோ! ..........உன்னைக் காணவுங் கண் கூசுகின்றது. போ, போ, போய்விடு. சத்தியம் என்பது ஒன்று உளதாயின் உனதெண்ணமும் ஆசையும் துரோகமும் சாம்பராய்ப் போகும் போ!''

"என்னடி, பிசாசே, என்னைப் பகைத்திகழத் துணிந்தனையோ!''

"உனக்குப் பகையல்லள். உன் நினைவையும் தொழிலையும் வெறுத்து இகழ்கின்றேன். ஏ, புஜங்கா, இனியுன்னைத் தந்தையென்று வாய்வைத் தழையேன்...ஏ, புஜங்கா, கொடியோய்......''

வரம்பிலாக் கோபம் வந்ததிப் புஜங்கனுக்கும். பஞ்சரவல்லியின் கழுத்தைப்பிடித்துத் தள்ளிச் சுவருடன்மோத எத்தனித்தான். அவளோ அந்தக்கணமே அவன் மூக்கை யெட்டிப் பிடித்துக்கொண்டாள். மூச்சு அடக்கமுடியாது புஜங்கனது கைகளும் நெகிழ்ந்தன. பெண்ணும் அவன் பிடிகழன்று விலகினள். பின்னுமவன் இவளைப் பற்ற முயல்கையில் கபாடம் திறக்கக் காவலாளர் இருவரும் உட்புகுந்தனர். புஜங்கனும் வெகுண்டு அவர்தமைத் தெழித்தனன். அவரோ இவனது சினத்தைச் சிறிது ஆற்ற முயன்றனர்.. பஞ்சரவல்லி அவனெதிர்வந்து, "புஜங்கா, பகைவரோ ஆயினோம். பெண்ணாதலால் நான் மற்போர் ஏற்றல் நேரிதன்று. வாட்போர் புரிந்து இன்றே இங்ஙனே இவர்முன் நம் பகைமுடிப்போம், வா. மானமோ துறந்தனை, மதியோ இழந்தனை, மகளெனும் உறவு போனவா றுணர்ந்திலை: புஜங்க, மற்றுநீ வீரனேயாயின் நான் கேட்கும் இப்போரை இல்லையென மறுக்கேல். இவ்வாட்களே நாம் புரியும் தனிப்போர்க்குக் கரியாவார். அதனில் என்னை நீ கொல்வதானாலும்கொன்றிடு. நானோஉன்னைக்கொல்லேன். பொய் உறைந்த நின் நெஞ்சுநின்று ஒருதுளி இரத்தம் சிந்தக் காண்பேனேல் வெற்றி யெனதென்றுகொள். பின் எனதடிமை யாவாய் நீ. நான் சாகாது வாளுடைந்து இகல்தோற்பின் நினதடிமை யாகின்றேன். அடிமையால் வரும் எளிமை இருவருக்கும் உளதாகும்,'' என்று பெண்மையையும் போக்கித்தகப்பனையேதனிப் போர்க்கழைத்தாள். ஆட்கள் இருவர் அங்கில்லாதிருந்தால் பெண்ணென்றும்கருதாது போர்முறையும் பாராது பஞ்சரவல்லியைப் புஜங்கன் பிடித்து வதைத்து உயிரையும் முடித்திருப்பான். ஆதலால், கையால் ஒறுக்க முடியாதபோது வாயாலேனும் வையலாம் என எண்ணியோ "சீச்சி! நாயே, இலங்கிணிப்பேயே, கற்ற வித்தையைக் காட்டுவதற்குத் தகுந்த இடம் தேடினாய்! பெண்ணென்று தோன்றிய புதிய கூற்றே, உன் கண்ணெதிரே அவ்வாசவனைச் சித்திரவதை செய்து இந்தப் பழியைத் தீர்த்துக்கொள்கின்றேன் பார்! ஏ, செருக்கிய சீமாட்டி, மதத்தொடு பொழிந்த நின் மாற்றத்தின் பயனை முடியக் காண்பதற்கு இங்கேயே இன்னும் இரு'' என்று புஜங்கன் அவளை வெருட்டியபின் காவலாளரை நோக்கிக் 'கயவீர், இப்பேய்மகள் மாத்திரம் காவல்கடந்து தப்புவாளாயின் உங்கள்தலை தரையில் உருண்டது, அறிவீரோ!'' எனக் கூறி யேகினான்.

---

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இப்பொழுது வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவு செய்து தாமதமின்றிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

# வில்லி பாரத விளக்கம்

## ஆதிபருவம்

### வேத்திரகீயச் சருக்கம்

211பக்கத் தொடர்ச்சி

தன்னெண்ணம் நிறைவேறாது சிறிதுநேரம் வாளா நின்ற இடிம்பி, "இனிவீணேநிற்பதிற்பயனில்லை, அவ்வாறு நின்றால் மாரனாகிய நிருதன் என்னைக் கொன்றுவிடுவான்; என் அண்ணனாகிய நிருதனும் வந்து உன்னைப் பின் கொல்லுவான்; ஆகையால்

நாடியென்கொன்மற் றுய்ந்துபோகலா
நம்பியென்னைநீ நலனுறத்தழீ இக்
கோடியம்பரத் திடையெழுந்துனைக்
கொண்டுபோவலோர் குன்றிலென்னவே

[பலபடப் பேசி யென்பயன்? நாம் பிழைப்பதற்கு வழியொன்றுண்டு. நம்பத்தகுந்தவனே எனக்கு நன்மையுண்டாக என்னைத் தழுவிக் கொள்வாயானால் நான் வானத்திலே தாவிப் பந்துபோற் கிளம்பி உன்னை மறைவிடங்க ளனேகமுடைய வோர் குன்றிற்கொண்டு சேர்ப்பேன் என்று கூறினாள்.]

அயோமுகிக்கும் இடிம்பிக்கும் உள்ள வித்தியாசத்தை இங்குப் பார்க்கலாம். இருவரும் வலிய ஆடவனொருவனைக் கட்டியெடுத்து ஆகாயத்தில் தூக்கிச் செல்லும் உரம் வாய்ந்தவர்கள். ஆனால் அயோமுகி இலக்குமணனை வாரி எடுத்துச் செல்லவேண்டுமென்றெண்ணினது தனதுவெம்மையைத் தணிக்க; இடிம்பி எடுத்துச் செல்லவேண்டுமென்றெண்ணினது அவனுயிரைக்காக்க. இடிம்பி அரக்கியாயிருந்தபோதிலும் அவள் செய்கைகளும் மொழிகளும், இரக்கமுடையவரும் அறிவின் மிக்கவருமாகிய மானுடருக்கு உரியவைகளாகவே இருக்கின்றன.

ஆயோமுகி,

எடுத்தனெ னேகினெ னென்முழை தன்னுள்
அடைத்திவன் வெம்மை யகற்றிய பின்னை
உடற்படு மானுட னேயுறு நன்மை
திடத்திது வேநல னென்றயல் சென்றாள்

[இவனை எடுத்துச்சென்று என் குகையில் அடைத்து வைத்தால், இப்பொழுதிவனுக்கிருக்கும் கோபம் தணிந்தபின்பு என்னோடு கூடச் சம்மதித்திடுவான்; உடனே எனக்கும் நன்மை வந்தெய்தும்; ஆகையால் நிச்சயமாய் இது தான் நல்ல வழியென்று அவனருகிற் சென்றாள்]

இவளுக்கொத்த மொய்ம்பையுடைய இடிம்பி "என்னை ஆலிங்கனஞ் செய்துகொள், உன்னைத் தூக்கிச்செல்கிறேன்" என்று இரந்து நின்றாள். இப்போதும் அவளுக்கு, மேல்விழுந்து வலுவில் தன்காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று தோன்றவே யில்லை. ஒருதலைக் காமத்தில் அவளுக்கு இச்சையில்லாதது அவளுடைய உயர்ந்த உணர்ச்சியைக் காட்டுகிறது. காமன் அம்பினால் மெலிந்துபோனதால் அவளுக்கு வலிவு போய்விட்டதோ? "நலனுறத்தழீ இக் கோடி" என்றதனால் ஒருவேளை அவனருள் பெற்றபின்பு அவளுக்குப் போதிய வலிவுண்டாகு மென்பதைக் குறிப்பாய் உணர்த்தினளோ? தன்னைத் தழுவிக் கோடலே அவனுடன்பாட்டிற்கு அறிகுறியாதலால் அவனிடம் தனக்குள்ள நம்பிக்கையை 'நம்பி' என்பதனால் வெளிப்படுத்திக் காட்டினள்போலும். மனதில் இரக்கமுண்டாகும்படி தன்முன் துன்பத்தால் துவண்டுநின்ற இடிம்பிக்கு வீமன் சொல்லிய மாறுத்தரத்தைக் கவனிப்போம்.

இரக்கமின்றியே தனிவனத்திலே
யிளைஞரெம்முன்யா யிவரைவிட்டெமைப்
புரக்கவல்லளென் றொருமடந்தைபின்
போவதாடவர்க் காண்மைபோதுமோ
வரைக்கண்வாழ்வுகூர் நும்முனெம்முனே
மலையவெண்ணிமேல் வந்தபோதுபா
ரரக்கனாகிலென் னவுணனாகிலென்
னவனையோர்கணத் தாவிகொள்வனே

[சிறிதும இரக்கமின்றி இந்த மனித சஞ்சாரமற்ற காட்டில் என் தம்பியர், தமையன், தாயாகிய இவர்களை விட்டு விட்டு, என் உயிரைக் காக்கவல்லவள் ஒரு பெண்ணாகிய நீ என்று உன்பின்னே தொடர்ந்து வந்துவிடுவது என் ஆண்தன்மைக்கு அழகானதோ? மலையில்வாழும் உன் அண்ணன் சண்டைசெய்ய வெண்ணி என்மேலெழுந்து வந்தபோது அவன் அரக்கனானாலென்ன, அவுணனானாலென்ன, அவனை ஒரு நொடியில் கொன்றுவிடுகின்றேன் பார்]

என்று வழக்கம்போல் வீரவார்த்தைகளைச் சொன்னானும். முன் சொன்னதுபோல் முரட்டுத்தன்மையே முன்னிற்கும்வீமனுக்கு வெட்டொன்று துண்டிரண்டு என்று பேசும் வழிதவிர, அச்சமயம் அவள்சொன்ன வார்த்தைகளினால்ஏற்பட்ட வேடிக்கையொன்றும்அவனுக்குத் தோன்றவில்லை. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், 'நன்றுநன்று நீ சொன்னசொற்கள் நன்றாயிருந்தன; பலே பலே" யென்று ஏளனம் செய்து நகைக்கத்தோன்றுமேயொழிய, ஒரு பெண்ணிடத்தில் வீரவார்த்தைகளைச்சொல்ல எவருக்கும் தோன்றாது. வீமன், முரட்டுத்தன்மையும் வெகுளியும் குடிகொண்டவன் என்னும் எண்ணத்தால் ஒருவேளை வில்லி அவன் வாயில் இச்சொற்களை வைத்து எழுதினாரோ என்னவோ தெரியவில்லை. ஆனால் அவர் இதில் இருக்கும் விநோதத்தை அறவே மறந்துவிட்டார். தன்னை யடைந்தால் தனக்குரிய இராக்கதர்களெல்லாம் இராமருக்குத் தொண்டு பூண்டு அடிமைகளாய் நடந்துகொள்வார்களாதலால், தனியே வனத்திடை உலவிவரும் இராமர் தன்னை மணப்பதே அறிவிற் சிறந்த செய்கையென்று உரைத்த சூர்ப்பணகைக்கு இராமர் சொன்ன உத்தரத்தை இங்கு நாம் குறிக்கொள்ள வேண்டும்.

நிருதர்த மருளும் பெற்றே
னின்னலம் பெற்றே னின்னோ
டொருவரும் செல்வத்தி யாண்டு
முறையவும் பெற்றே னென்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச்
செய்தவம் பயந்த தென்னா
வரிசிலை வடித்த தோளான்
வாளெயி றிலங்க நக்கான்

[ஒகோ! இராக்கதர்களுடைய கிருபையும் எனக்குக் கிடைத்துவிட்டது; உன்னுடைய ஆக்கை நலத்தையும் பெற்றுவிட்டேன்; உன்னோடு நீங்காத செல்வத்தோடு என்றும் வாழவும் பாக்கியம் பெற்றேன்; அயோத்தியை விட்டு நீங்கியபின் யான் செய்த தவத்தின்பலன் எனக்குக் கிட்டியது, என்று சொல்லிக் கோடுகளையுடைய வில்லைச் சேர்த்திய தோளுடையான் தன் கூரிய பளபளப்பான பற்கள் தோன்றச் சிரித்தான்]



பாவையொருத்தி பகன்ற மொழிகளாற் பருத்த கோபங்கொண்ட வீமனைப்போலன்றி, இராமர் அம்மடந்தையிடத்து அழன்றுரைக்காமல் அவள்சொற்களால் தனக்குத்தோன்றிய விநோதத்தையே முன்னதாக வைத்துச் சிரித்தது இயற்கையே அன்றோ? மானுடர்தம் வார்த்தைகளும், அவர் செய்கைகளும், எவ்வெக்காரணத்தா லெழுகின்றனவென்று கூர்ந்துநோக்கித் தன் ஆழ்ந்த அனுபவத்தால் அறிந்த கம்பர் இவ்வமயத்தில் இயற்கைக் குணங்களை வெளியிடும் விஷயத்தில் வில்லியைவிட மேலாகத் துலங்குகின்றார்.

இவ்வாறிவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போதே இடிம்பியைத் தேடி இடிம்பன் அவ்விடம்வந்து சேர்ந்தான். தன் தங்கை நிலையையும் முகக் குறிப்பையும் நோக்கிக் காற்றடிக்கும் விதம் இன்னதெனக் கண்டுகொண்டான்.

உணவினசையாற் கொல்லவந்தநீ
யுவகையாசையா லுள்ளழிந்திவன்
கணவனாமெனக் காதலிப்பதே
கங்குல்வாணர்தங் கடனிறப்பதே
யணவுவெம்பசிக் கனலவிந்துபோ
யநங்கவெங்கனற் கொளுமடற்புலிப்
பிணவையன்பினிற் கலைநயப்பதே
பேதைமானுடன் பேசுகிற்பதே

[வயிற்றிற்குஉணவு வேண்டிக்கொல்லவந்த நீ இப்போது காமத்தாற் பீடிக்கப்பட்டவளாய் இதோ நிற்கும் மானுடனாகிய இவனைக் கணவனாக வரிக்க எண்ணினதே நிசாசருடைய கடமையிற் பிழைத்ததாகும். ஏ பேதையாகிய மனிதனே! நீ இம்மானாகிய என் தங்கையுடன்பேசுவது, பொருந்திய பசித்தணல் அவிந்து, உருவிலியாலாகிய காம வெந்தீயாற் சுடப்பட்ட பெண்புலியிடத்திற் கலைமானானது வேட்கை கொண்டுற்றது போலாகும்]

காமத்தால் மெலிந்திருந்தபோதிலும் பெண்புலியானது, ஆணாகிய கலைமானைச் சேராது கொல்லுதல் போல், பிறவியில் வேறாகிய உன்னை அரக்கி மெலிந்தும் கொல்வாள், என்பது கருத்து. இச்செய்யுளில் உவமையானது மாறுபட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. இடிம்பி பெண்புலியும் வீமன் கலைமானுமாக உவமிக்கப்பட்டார்கள். ஆனால் கடையடியில் பேதை அண்மைவிளியாய் மான்என்பது இடிம்பியைக்காட்டி நின்றது. பெண்புலியாகிய இடிம்பி அதே அடியில் மானாக மாறிவிட்டாள். அற்றேல், கலைமான், பெண்மானை நயப்பதில் என்ன தவறு? அல்லது, பேதையாகியமான் எனப் பண்புத்தொகையாக்கி, 'பேதை மானாகிய இடிம்பியுடன் (நீ) பேசுகிறது, புலிப்பிணவை (பெண்புலியை) கலை நயப்பது' என்று கொண்டாலும் உருவக முரண்பாடு அழியாது நிற்பது காணத்தகுந்தது. ஓரே செய்யுளில் ஓரே வேளையில் ஒருத்தி பெண்மானாகவும், பெண்புலியாகவும் உருவகப்படுத்தப்பட் டிருக்கிறாள். ஆங்கிலக்கவிகள் சிலர், ஒருவன் இறும்பூதினாலோ, தனக்கு நேர்ந்த ஆபத்தினாலோ கல்லாகி நின்றான் என்று சொல்லிவிட்டு, உடனே அவன் குதித்தோடினான் என்று கூறுவதுங் கூட மேலே சொன்னதுபோல் ஒருத்தி மானாகிப் புலியாகி நிற்றல்போல் அவ்வளவு பிழையாகாது.

நிற்க, தன்னண்ணன் வீமனாற் கொல்லப்பட்டதைக் கண்ட இடிம்பி,

'உளைவுட னுவகையு மொருங்கி னெய்தினள்'

துன்பத்தோடு உவகையும் ஒருங்கே அடைந்தாள் என்று ஒரு வரியிற் சொல்லி நிறுத்திவிட்டார் நமது வில்லி. எவ்வளவுதான் ஒருத்தி காமத்தால் மெலிந்திருந்தாலும் அவள் தன் கண்ணெதிரில் அண்ணன் இறந்து கிடக்கக்கண்டால் துக்கமேலீட்டால் தன்னை மறந்து அழுவது இயற்கையே யன்றோ? அச்சமயம் காமம் பறந்துபோய்த் துக்கமே தனித்து நிற்கும். மேலும் தன் அண்ணன் இறப்பதற்கும் ஒரு வகையில் தானே காரணமாயிருந்ததை நினைத்தால் பின்னும் மனது நைந்தழுவது இயற்கை. வில்லிபுத்தூரார் அதை வெளிப்படுத்திக் காட்டத் தவறிவிட்டார். எங்ஙனமாயினும், தானாடாவிட்டாலும் தன்சதை யாடுமன்றோ? தன்சொற் கேளாது தன்னை வெறுத்துத் துரத்திய இராவணன் இறந்தபோது,

'அண்ணாவோ அண்ணாவோ அசுரர்கள்தம் பிரளயமே அமரர் கூற்றே' என்று ஆண்மகனான வீடணன் கதறிய பேரரவம் கேட்டிலரோ நமது வில்லி? தன்னை மறந்து அவள் கதறியழவும், அருகில் நிற்கும் பெண்பாலாகிய குந்தி அவளைச் சமாதானப் படுத்தவும் செய்திருத்தல் நூலாசிரியர் கடமை.

முதனூலாகிய வடநூலில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்று எமக்குத் தெரியவில்லை. முதனூலில் ஒன்றும் சொல்லப்படாவிட்டாலும் மேற்கண்டபடி புனைந்தெழுதுதல் கவியாசிரியர் கடமையென்றே நாம் சொல்லுவோம்.

இதற்குள் இரவுகழிந்து பொழுதுவிடிந்தது. இயற்கைத்தோற்றத்தையும், இயற்கையாலுண்டாகிய மாறுபாடுகளையும், தாம் சொல்லப்புகுந்த கதைக்கேற்பவும், தலைமகன் தலைவி செயல்களுக்கேற்பவும் உறவு காட்டி வருணித்துரைப்பது எல்லாநாட்டுக் கவிகளுக்கும் இயல்பு. தற்குறிப்பேற்றம் தன்மைநவிற்சி, பிறிதினவிற்சி, உயர்வுநவிற்சி யணிகளிற் கம்பருக்கு ஈடுமெடுப்புமுடையவர் எவருமிலர். இச்சமயத்தில் சூரியோதயமானதை வில்லி இரண்டு கலிவிருத்தங்களால் சொல்லலுற்றார்.

பெருந்திற னிசாசரப் பிணத்தை யவ்வனத்
திருந்துள பறவைகட் கிருள்செய் கங்குலின்
விருந்திடக் கொளுத்திய விளக்கெ னும்படி
யருந்திசைப் பொலிவுற வருக்கன் றோன்றினன்.

[அதிகவலிமைமையுடைய இராக்கதனுடைய பிணத்தை அக்கானகத்திலிருந்த பறவைகளுக்கு அந்தகாரத்தை யுண்டாக்கும் இருளில் விருந்து செய்யும்படி கொளுத்தப்பட்ட விளக்கென்னும்படியாக மங்கல திசையாகிய கீழ்த்திசை ஒளிபெறும்படி சூரியன் தோன்றினன்]

இதுபடித்ததும் மனதிற்கு மகிழ்ச்சி செய்வது போல் தோன்றுகிறது. இருட்டில், பறவைகள் விருந்துண்ண ஓர் விளக்கைத் தூக்கிப் பிடிப்பதுபோல் சூரியன் தோன்றுதல் விநோதமே. ஆயின், விளக்கைக் காட்டுவது என்றால் இருள் சூழ்ந்திருக்க, நமக்கு வேண்டிய ஓரிடத்தில்மட்டும் ஒளியுண்டாகும்படி காட்டுவதுதான் விளக்கைக் காட்டுவதென்னலாம். இருளில் விளக்கைக்காட்டுவதென்றால் இருளிருந்தாலன்றோ விளக்கைக் காட்டமுடியும்? சூரியன் தோன்றியவுடன் இருள் எங்கே நிற்கும்? சூரியன் இருளின் பகைவனல்லனோ? ஆகையால் கங்குலில் விளக்கென்பது பொருந்தாது. எனவே இத்தற்குறிப் பேற்றவணி பழுதுடையதா யிருத்தல் நோக்குக.

கரங்களா னிசாசர விருளைக் காய்ந்துகொண்
டிரங்கிநீள் வனத்திடை யிரவின் மாழ்கிய

வரங்கொடா மரைமுக மலர்த்து நீர்மையா
லுரங்கொள் வீமனுக் கெதிருதய பானுவே''

வீமன் சூரியனுக் கொப்பானென் எனக்கூறும் இச் செய்யுள் மிகவும் அழகாயிருக்கிறது. தன் கிரணங் களால் இருளிற் சஞ்சரிக்கும் இருளைக் கடிந்து, நீண்ட நீர்நிலைகள்தோறும் வருந்தி இரவில் துன்பப் படும் மேன்மை பொருந்திய தாமரைமலரைச் சூரியன் மலரச் செய்வதுபோல வீமன் தன்கைகளால் இராக் கதனுகிய இருளைக்கொன்று, துன்பமுழன்று நெடிய வனத்தில் இரவில் துன்பத்திலாழ்ந்திருந்த, மேன்மைப் பட்ட தாமரைக் கொப்பான இடிம்பியின் முகத்தை மலரச்செய்தான். முகம் மலர்தல், இங்கே தன் காத லன் வெற்றிபெற்றமையால் இனித் தன் னெண்ணம் நிறைவேறுமென்ற உள்ளக்களிப்புத் தோன்ற நிற்றல்

# அப்பர்

## 3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

3 தஞ்சாவூர் ஜில்லாத் தலயாத்திரை.

206பக்கத் தொடர்ச்சி

திருவாரூரில் திருவாதிரைநாளில் வீதிவிடங்கப் பெருமான் பவனிவருவதைக் கண்டு தரிசித்துத்திருநாவுக்கரசுநாயனர் திருப்புகலூரை நோக்கிச் சென்றனர். பல சிவஸ்தலங்களை அப்பர் பணிந்து திருப்புகலூருக்குச் செல்லுங்கால் அவ்வூரில் முருகநாயனர் திருமடத்தி லெழுந் தருளியிருந்த திருஞானசம்பந்தர் அடியார்குழாம் சூழ அப்பரை வரவேற்றனர். இவ்விருவரும் ஒருவரையொருவர் வணங்கிய பின்னர்ச் சம்பந்தர் "அப்பரே நீர் திருவாரூரில் நிகழும் பெருமையை வகுத் துரைப்பீ''ரென, அப்பர் "முத்துவிதான மணிபொற் கவரி'' யென்னும் திருவாதிரைப் பதிகம் பாடினர். அதுகேட்ட சம்பந்தர் "நான் திருவாரூர் கும்பிட்டுத் திரும்பி உம்மோடு இங்கே அமர்வேன்'' என்று சொல்லித் திருவாரூருக்குச் சென்றார். அப்பரும் சம்மதித்துத் திருப்புகலூரிலே யிருந்தார்.

இவ்வாறு திருப்புகலூரில் அப்பர் வீற்றிருக்குநாளில் திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு சாத்தமங்கை அதன்பாலுள்ள அயவந்தி ஆலயம் இவற்றை அன்புடன் சென்று வணங்கிச் சிலநாள் திருவாரூரில் கழித்தனர். இங்கும் புகலிவேந்தரும், சிறுத்தொண்டரும் நீலநக்கரும் அவரிடம் எழுந்தருளினர். இம்மூவரும் ஆறுடையபிள்ளையாரும் முருகனர் திருமடத்தில் பல சிவனடியார்களுடன் வீற்றிருந்தார்கள். பின்னர்த் திருநீலநக்கர், சிறுத்தொண்டர், முருகனர் முதலிய அடியார்களுக்கு விடைகொடுத்து, அப்பரும் சம்பந்தரும் திருஅம்பர் என்னும் தலத்திற்குச் சென்றனர். திருவம்பர் பெருந்திருக்கோயிலிலும், திருஅம்பர் மாகாளத்திலும் திருஞானசம்பந்தர் பதிகங்களே திருமுறைகளில் உள. அப்பர் பதிகங்கள் மறைந்தன.

திருவம்பரிலிருந்து இருவரும் திருக்கடவூரணைந்து குங்கிலியக்கலயனர் திருமடத்தில் அமுதுண்டு, திருக்கடவூர் திருமயானம் இவற்றில் பல பாடல்கள் பாடினர்கள். திருக்கடவூர் வீரட்டத்தில் சம்பந்தர் பதிகம் —1, அப்பர் பாடியவற்றில் திருநேரிசை—1, திருவிருத்தம்—1, திருக்குறுந்தொகை 1ஆக நான்கு பதிகங்கள் உள. திருக்கடவூர் மயானத்தில் சம்பந்தர் பதிகம் 1, அப்பர் திருக்குறுந்தொகைப் பதிகம் 1 திருமுறைகளில் காணப்படும். திருக்கடவூரிலிருந்து இருவரும் திருஆக்கூருக்குச் சென்று தான்றோன்றியப்பனரை இருவரும் வணங்கிப் பாடிப் பலதிருப்பதிகள் சென்று முடிவில் திருவீழிமிழலையென்னும் நகரை யடைந்தனர்.

திருவீழிமிழலையில் சம்பந்தரும் அப்பரும்ஒருவருடத்திற்குக் குறையாமல் வீற்றிருந்தனரென்பதற்குத் தேவாரத்திலுள்ள இவர்கள் பாடல்களே அத்தாட்சியாகும். சம்பந்தர் பதிகங்கள் பற்பல வகையன பதினன்குஉள. திருநாவுக்கரசுநாயனர் பாடிய நேரிசைப் பதிகம் ஒன்று, திருவிருத்தம் ஒரு பதிகம், திருக்குறுந்தொகை இரண்டுபதிகங்கள், திருத்தாண்டகம் நான்கு ஆக எட்டுப் பதிகங்கள் உள. இத்தலத்தில் விண்ணினின்றிழிந்த விமானத்தின் கிழக்கு மேற்கு * வாசற்படிகளில் நாள்தோறும் பொற்காசு கட்டி உலகத்தின் பஞ்சம் நீக்குமாறு சம்பந்தருக்கும் அப்பருக்கும் சிவபெருமான் திருவருளால் வைக்கப்பட்டமை சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத்திலும் † காணலாம்.

அப்பர் மேற்குப்பீடத்தில் பெற்ற காசும் சம்பந்தர் கிழக்குப்பீடத்தில் பெற்ற காசும் முறையே அவ்வவர் திருமடத்தில் வரும் யாவருக்கும் கறி நெய் பால் தயிரோடு அன்னமளிக்கப் பயன்பட்டன. பஞ்சம் போகும்வரையில் பிரதிதினம் இவ்விருவரும் பொற்காசுகள் இவ்விதம்பெற்று அந்நாட்டில் வந்த யாவரையும் காப்பாற்றினர். அக்காலத்தில் ஒருநாள் அப்பர் திருமடத்தில் அடியார்கள் காலம்பெறத் திருவமுது செய்தலையும், தம்முடைய மடத்தில் அடியார்களுக்கு அமுதிடுவதில் காலதாமத மாவதையும் சம்பந்தர் கண்டு காரணம் யாதென்று பாகுகர்களை அவர் வினவ, அதற்கவர்கள் "சுவாமி! தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்கும்போது வாசி (வட்டம்) கேட்கிறார்கள். அப்பர்மூர்த்தி பெற்ற காசையோ வாசியின்றி ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதனுல் காலம் தாழ்கின்றது'' என்றனர். பிள்ளையார் அதுகேட்டு அப்பர்மூர்த்தி கைத்

---

* மகாலிங்கையர் உரை.

†(i) பரந்த பாரிட மூரிடைப்பலி பற்றிப் பார்த்துணும்
தெரிந்த நான்மறை யோர்க்கிட மாய திருமிழலை [சுற்றமாயினீர் [கினீர்
இருந்துநீர் தமிழோடிசை கேட்குமிச்சையாற் காசுநித்தனல்
அருந்தண் வீழிகொண் டீரடியேற்கு மருளுதிரே
—சுந்தரர்-திருவீழிமிழலையின் சிகாமரம் 8.

(ii) நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த
நிறைமறையோ ருறைவீழி மிழலைதனி னித்தல்
காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டும்
கடனுகை காரோண மேவியிருந் தீரே
—ஷை திருநாகை 7.



தொண்டு செய்தலால் அவர் பெறுங் காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றதெனச் சிந்தித்து"வாசிதீரவே காசு நல்குவீர், மாசின் மிழலையீர் ஏசலில்லையே' ¶ என்று பதிகம் பாடினர்.

இவ்வாறு திருஞானசம்பநதர் பாடியபின்னர் அவருக்களிக்கும் பொற்காசும் வாசியின்றி மாறலாயிற்று. * மழைபெய்து பஞ்சம் நீங்கியபின்னரே அப்பரும் சம்பந்தரும் மற்றுமுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பித் திருவாஞ்சியமடைந்து அங்கிருந்து திருமறைக்காடு என்னும் வேதாரண்யக்ஷேத்திரத்தை அடைந்தார்கள். சமுத்திரக் கரையிலுள்ள இப்பதியின் திருக்கோயிலில் வேதங்கள்வழிபாடுசெய்துதிருக்காப்புச் செய்தநாள்முதல் அபிமுகத் திருவாயில் மூடப்பட் டிருந்தமையால் அதைக்கண்ட தோணிபுரத்தரசு திருநாவுக்கரசை நோக்கி, 'திருக்காப்பு நீங்கப்பாடும் அப்ப' ரென அவர் ஒன்பது பாடல் பாடுமளவும் கதவு திறக்காமைகண்டு வருந்திப் பத்தாம் பாசுரத்தில் "இரக்கமொன்றி லீரெ''னப்பாடத்திருக்காப்புநீங்கியது. அன்பர்கள் உள்ளேசென்று பணிந்தனர் இருவரும் பல தமிழ்மாலைகள் பாடினர்கள். கடவுளை யிறைஞ்சியபின்னர் வெளியில் வந்து அப்பர் சம்பந்தரைக் கதவடைக்கும்வகை பாடுமெனச் சண்பையர்கோன் முதற்பாட்டிலேயே கதவு திருக்காப்பாயிற்று. அந்நாள்முதல் அக்கதவு திறக்கவும் மூடவும் வழக்கமேற்பட்டது.

அப்பர் தாம் பதிகம்பாடி முடியும்வரையில் கோயிற் கதவு தாழ்ந்து பின்பு திறந்ததும் திருஞானசம்பந்தர் முதற்பாட்டில் மூடியதும் நினைத்து "நம்பர் திருவுள்ள மறியாது அயர்ந்தேன்'' என வருந்தித் † திருமடத்தில் அரு நித்திரை செய்தார். சிவபெருமான் தன் பொன்மேனியுடன் " வாய்மைதிறம்பா வாகீசர்'' முன் வந்து "நாம் வாய்மூரில் இருப்போம், அவ்விடத்திற்குத் தொடர்ந்து வா'' என்றருளினர். அப்பர் "இது எம்பெருமான் அருளாகில் யானும்போவேன்'' என்று எழுந்து ‡ வேதவனத்தினின்று புறப்பட்டுச் செல்லவும், பரமசிவன் தன் திருக்கோலத்துடன் முன்னே சென்றார். நெடிது தூரம் பின்னே சென்ற அப்பர் விரைவில் முன்னே செல்பவரைப் பற்ற முடியாமற் போயிற்று. அவ்விதமாகச் சுவாமி * எழுந்தருளிச் சமீபத்திலேயே காட்சி கொடுக்கின்றவர் போல் பொன் மயமான கோயில் ஒன்றை எதிராகக் காண்பித்து அனுள்ளே புகுந்தார். அப்பரும் பின் தொடர்ந்தார். இதற்குள் இச்சங்கதி கேள்வியுற்றுச் சம்பந்தரும் அவ்விடம் வந்தார். அப்பர் சிவபிரான் தன்னை அழைத்துக்கொண்டுவந்து நெருங்கினவரைப் போல் காட்டி மறைந்தாரென்று வருத்தப்பட்டுச் "சம்பந்தமூர்த்தியே திறக்க வேண்டுமென்பது நினையாமல் அடியார்கள் பெருமையை அலட்சியம் செய்வது போல் திறந்த எனக்குத் தரிசனம் கொடாமல் ஒளிக்கலாம். அக்கதவு அடைக்கச்செய்த மூர்த்தி இதோ வந்திருக்கின்றார். † நீர் எங்கே மறையக்கூடும்'' என்று சொல்லச் சம்பந்தரும் அப்பரும் காணக் கண்ணுதலார் தரிசனம் தந்தனர். அம்மாட்சிமையை அப்பர் "பாட வடியார் பரவக்கண்டேன்'' என்னும் திருத்தாண்டகத்திலும், சம்பந்தர் "தளரிளவளரென உமைபாட'' என்னும் சந்த விருத்தப் பதிகத்திலும் பாடினர்.

சிலநாள் திருவாய்மூரில் அப்பரும் சம்பந்தருடன் வீற்றிருந்து வேதாரண்யத்திற்கு மீண்டனர். அப்போது பாண்டிமா தேவியாரும் குலச்சிறையார் விட்ட தூதர்கள் புகலிவேந்தரைக்கண்டு சமணர் தீத்தொழில்களைப் பொறுக்ககில்லோ மென்று முறையிட்டனர். அதுகேட்டுச் சண்பைத் திருமறையோர் அவ்வன் தொழிலோர் செயல்மாற்றி ஆதிசைவ நெறி விளக்குவான் எழுந்தனர். அப்போது அப்பர் சம்பந்தரை நோக்கி "நீர் போவது எனக்குச் சம்மதமில்லை. அச் சமணர் தந்திரங்களிற் சிறந்தவர். நீர்போவதற்குப் பதிலாக நானேபோய் அவர்கள் மாயச்செய்கைகளைச் சிதைத்து வருவே'' னென்றனர். சம்பந்தர் எதற்கும் சம்மதிக்காமல் பாண்டியநாடு எழுந்தருளினர்.

இவ்வாறு சம்பந்தர் விடைபெற்றுச் சென்ற பின்னர் அப்பர் கடனுகைக்காரோண மென்னும் நாகப்பட்டணம் வழியாய்ப் பலதலங்களைப் பாடித்திருவீழிமிழலைக்குச் சென்றார். திருநாகைக்காரோணத்தில் திருநேரிசை 1, திருவிருத்தம் 1, திருக்குறுந்தொகை 1, திருத்தாண்டகம் 1, ஆக நான்கு திருப்பதிகங்க

---

¶ இறைவனுயினீர், மறைகொண் மிழலையீர், கறைகொள் காசினை, முறைமைநல்குமே'' என்றும், "உய்யநல்குமே'', "பேறுமருளுமே,'' "சேமநல்குமே'' "சங்கைதவிர்மினே'', "காக்கை தவிர்மினே'', "பயனுமருளுமே'' என்றும் பாடினர்.

* இப்பதிகத்தின் பொருளை அறிஞர் ஆராய்க:—
பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாட வாட்டம் தவிர்ப்பா ரவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயென
ஓடிப்'போந்திங் கொளித்தவா றென்கொலோ?
—திருவாய்மூர்—திருக்குறுந்தொகை—7.

† தனக்கே ரூமை தவிர்கென்று வேண்டினும்
நினைத்தேன் பொய்க்கருள் செய்திரு நின்மலன்
எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேயெனப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ?
—ஷை 9.

‡ அசத்தியன்பள்ளி ஸ்டேஷனிலிருந்து வடக்கே $2\frac{1}{2}$ மைலில் இருக்கிறது. நாகப்பட்டணத்திலிருந்து தோணியிலும் போகலாம்.

* இப்பதிகங்கள் இவ்வற்புதத்தை விளக்கிக் காட்டும்:—

(i) மன்னு மாமறைக் காட்டு மணாளனர்
உன்னி யுன்னி யுறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவனு மாசொல்லி
என்னை வாவென்று போனா தென்கொலோ?

(ii) தஞ்சே கண்டேன் தரிகிலா தாரென்றேன்.
அஞ்சே லுன்னை யழைக்கவந் தேனென்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே!

(iii) கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலே னுக்கவே யோட்டந்தேன்
வழியிற் கண்டிலன் வாய்மூ ரடிகடம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்ற தென்கொலோ

(iv) ஒள்ளி யாரிவ ரன்றிமற் றில்லையென்
றுள்கி யுள்கி யுகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யாரிவர் போலத் திருவாய்மூர்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே
—திருவாய்மூர்-திருக்குறுந்தொகை 2,3,4,5.

† திறக்கப் பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே?—ஷை8.

ளூள. திருநேரிசை திருவிருத்தம் இவ்விரு பதிகங்களில் 9-ம் பாசுரங்கள் மறைந்தனவற்றைச் சேர்ந்தவை. இத்திரு நேரிசை நெஞ்சைநோக்கித் தன் சுவானுபவம் கூறியதாய்க் காணப்படுகின்றது.§ இத் திருவிருத்தங்களும் மற்றைய திருப்பதிகங்களும் அப்பர் காலத்தில் நாகப்பட்டணத்தின் வண்மையை விளக்குகின்றன.

கடனாகைக் காரோணம் நீங்கியபின்னர் அப்பர் வீழிமிழலைக்குச் சென்று * மேலுலகத்தினின்று இறங்கிய பெருமை பொருந்திய கோயிலில் ஒப்பற்ற † ஆண்டவரைத்துதித்தனர். அங்குச் சிலகாலமிருந்தபின் பிற ஸ்தலங்களைத் தரிசிக்க ஆசை கொண்டவராய்த்திருவாடுதுறைக்குச்சென்று சம்பந்தருக்குஆயிரம்பொன் கொடுத்த மகிமையைக் குறித்துப்பாடிப் ‡ பழையாறை யென்னும் திருப்பதிக்குச் சென்றனர்.

திருநாவுக்கரசர் திருப்பழையாறைக்குச் சமீபமாய்ச் செல்லும்போது வடதளி யென்னும் கோயில் எழுந்தருளியிருக்கும் கடவுளைக் கும்பிடக் கைகளைக் கூப்பியபோது அதைச் சைனர்கள் விமானமென்று சொல்லக்கேட்டு உள்ளம் சகிக்காமல் அந்த விமானத்திற்கு அருகில் ஒரு பக்கமாகச்சென்று கொன்றை முடியரைத் தியானித்து "நான் உம்மை வணங்காமற் போகே" னென்று அமுது செய்யாதிருந்தனர். அன்றிரவு சோழராசன்கனவில் கடவுள்தோன்றி "விவேகமில்லாத சமணர்கள் நம்மை மறைக்கும்படியாக விருந்தோம், அக்கோயில் உள்ள இடத்திற்குஇன்ன அடையாளங்கள்காணலாம்; நம்மை அப்பர்கும்பிடும் பொருட்டுஅச்சமணர்களைஒழிக்கக்கடவாய்" என்றுசொல்லி மறைந்தனர். அரசன் மந்திரிகட்குஇவ்வாச்சரியமான கதையைக்கூறி † அடையாளங்கள் வழிச்சென்று அப்பரை வணங்கி அவ்விடத்தில் கூடிய ஆயிரம் வஞ்சச் சமணர்களையும் அழித்தனன். பிறகு அரசன் சுவாமிக்கு விமானம்செய்து விளங்கச்செய்த பின்பு அருச்சனை நிவேதனம் முதலாகிய வழிபாடுகளுக்கு வேண்டியவைகளை வரவழைத்து நிறைவேற்றி வணங்க அப்பரும் புகுந்து "தலையெலாம் பறிக்கும் சமண்கையருள்' என்னும் திருக்குறுந்தொகை பாடியருளினர் ‡ பின்னர் வெளியில் வந்து சிலநாள் அங்கு வாசஞ்செய்து காவேரியாற்றி னிரண்டு கரையிலும் உள்ள ஸ்தலங்களில் பதிகம்பாடித் திருவானைக்காவலுக்குச் சமீபத்தில் வந்தார்.

---

§(i) வெங்கடுங் கானத் தேழை தன்னொடும் வேட னாய்ச்
சென்றங்கமர் மலைந்து பார்த்தற் கடுசர மருளி னானை[சென்
மங்கைமா ராட லோவா மன்றுகா ரோணத் தானைக்
கங்குலும் பகலும் காணப் பெற்றுநான் களித்த வாறே
திருநாகைக்காரோணம்-திருநேரிசை—7

(ii) கற்றார் பயில்கட னாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
விற்றூங் கியகரம் வேனெடுங் கண்ணி வியன்கரமே
நற்றா ணெடுஞ்சிலை நாண்வலித் தகர நின்கரமே[னே.
செற்றார் புரஞ்செற்ற சேவகமென்னைகொல் செப்புமி
ஷை திருவிருத்தம்—2.

(iii) அலங்கல் சேர்சடை யாதிபு ராணனை
விலங்கல் மெல்லியல் பாகம் விருப்பனை
கலங்கள் சேர்கட னாகைக்கா ரோணனை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே
திருநாகை-திருக்குறுந்தொகை—6

(iv) நடையுடைய நல்லெரு தொன் றூர் வான்றன்னை
ஞானப் பெருங்கடலை நல்லூர் மேய
படையுடைய மழுவாளொன் றேந்தி னானைப்
பன்மையே பேசும் படிறன் றன்னை
மடையிடையே வாளை யுகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண்டனைக்
கடையுடைய நெடுமாட மோங்கு நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றும் காணலாமே
திருநாகை-திருத்தாண்டகம், 5.

* வீழி மிழலை தனைப்பணிந்து வேதமுதல்வர் தாம்விரும்பி
யாழி வலமேந்தியவரியா லாகாசத்தினின்றிழிந்த[சைத்துத்
வாழி மலர்ந்த கோயிறனின் மன்னும் பொருளைப் போற்றி
தாழு நாளிற் பிறபதியும் பணியுங் காதல் தலைநிற்பார்
—பெரியபுராணம் 292—

† மெய்த்தவன்காண் மெய்த்தவத்தி னிற்பார்க்கெல்லாம்
விருப்பிலா விருப்புமன வினையார்க் கென்றும்
பொய்த்தவன்காண் புத்தன் மறவா தோடி
யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்
உய்த்தவன் காணுயர்கதிக்கே யுன்கி னாரை
யுலகனைத்து மொளித்தளித்திட் டுய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்ணிழிதண் வீழி மிழலையானே
—திருவீழிமிழலை-திருத்தாண்டகம் 8.

‡ பூவிற் பொலியும் புனற்பொன்னிக்
கரைபோய்ப் பணிவார் பொற்பமைந்த
ஆவுக் கருளும் ஆவடுதண்
டுறையார் பாத மணைந்திறைஞ்சி

நாவுக் கரசர் ஞானப்போ
னகர்க்குச் செம்பொ னாயிரமும்
பாவுக் களித்த திறம்போற்றிப்
போந்து பிறவும் பணிகின்றார்.
—பெரியபுராணம். 293

† கண்ட வியப்பு மந்திரிகட்
கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த
அடையா ளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக்
குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை யடிவணங்கித்
தொக்க வமணர் தாரறுத்தான்— ஷை 296

ஆனை யினத்திற் றுகைப்புண்டவமணாயிரமுமாண்டதற்பின்
மேன்மை யரசன் ஈசற்கு விமான மாக்கி விளக்கியபின்
ஆனவழிபாட்டர்ச்சனைக்குநிரம்பவெல்லாமமைத்திறைஞ்ச
ஞான வரசும் புக்கிறைஞ்சி நாதர் முன்பு போற்றுவார்
பெரியபுராணம். 297

‡ மூக்கி னான்முரன் றோதிய குண்டிகை
தூக்கி னார்குலம் தூரறுத் தேதனக்
காக்கி னானணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யாலரு நோய்களே 2
வாயி ருந்தமி ழேபடித் தாளுறா
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே 9
திருவாறைவடதளி-திருக்குறுந்தொகை.



# தமிழ்ப் பாடம் 64.

[நளவெண்பா.]

189047

## கலி நீங்கு காண்டம்.

வாகுகன் கொணர்ந்த தேரில் அயோத்திமன்னன் விரைந்தேறித் தமயந்தியின் திருநகர்க்கு வழிக்கொண்டான். அந்தத் தேர் சென்ற வேகத்தைப் புகழேந்தி மிகவும் அழகாகச் செப்புகின்றார்.

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்றா மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றா னூர்கின்ற தேர். 44.

பதப்பிரிவு:- முந்தை வினை குறுக மூவா மயல் கொண்டான் சிந்தையினும் கடுக சென்றது சந்தம் விரை தார் குன்றா மெல் ஓதிதன் செயலை தன் மனத்தே தேர்கின்றான் ஊர்கின்ற தேர்.

அன்வயம்:- சந்தவிரைத் தார் குன்றா மெல் ஓதிதன் செயலைத் தன் மனத்தே தேர்கின்றான் ஊர்கின்ற தேர், மூவா மயல் கொண்டான் சிந்தையினுங் கடுக, முந்தை வினை குறுக, சென்றது.

பதவுரை.

சந்தம் - அழகும்
விரை - வாசனையும் (அமைந்த)
தார் - பூமாலையானது
குன்றா - நீங்காத
தார் - பூமாலையை அணிந்த
மெல் - மென்மையாகிய
ஓதிதன் - கூந்தலையுடைய தமயந்தியின்
செயலை - (இரண்டாம் சுயம்வரம் என்னும்) இக்காரியத்தை
தன் - தன்னுடைய
மனத்தே - மனத்திற்குள்ளே
தேர்கின்றான் - ஆராய்கின்றவனாகிய வாகுகன்
ஊர்கின்ற - நடத்துகின்ற
தேர் - அந்தத் தேரானது,
மூவா - தளராத
மயல் - மோகத்தை
கொண்டான் -கொண்டவனாகிய இருதுபன்னனது
சிந்தையினும் - மனத்தைக் காட்டிலும்
கடுக - வேகமாக,
முந்தை - முன்னைய
வினை - வினையானது
குறுக - தேய்ந்ததால்,
சென்றது - (குண்டினபுரத்தை நோக்கி) சென்றது.

விரிவுரை :—நினைத்தமாத்திரத்தில் மனமானது எத்தனை தூரத்திற்கு அப்பாலுள்ள இடத்தையும் சென்றடையலாம். இதனை மனோவேகம் என்பர். இருதுபன்னனுடைய மனம், தமயந்தியின் இரண்டாம் சுயம்வரமாலையைக் கடிதின் பெறவேண்டுமென்னும் ஆசையால் குண்டினபுறத்திற்குப் பாய்ந்தோடுகின்றது என்றால், வாகுகனுயமர்ந்த நளன் ஓட்டிய தேரோ அதனிலும் வேகமாய் ஓடியது. அத்தேரை ஓட்டிய நளன், முன்னை வினையோ, தன்னைத்தான் காண இசைந்ததோ என்று பற்பல விதங்களில் ஆராய்ந்து தமயந்தி தான் இரண்டாம் சுயம்வரம் நாட்டியுள்ளாள் என்று தெரிவித்துக்கொண்ட செயலைப் பற்றி யோசிப்பவனாயினன்.

இருதுபன்னன் மூவா மயல்கொண்டு தமயந்தியின்பால் விரைந்ததும் அவ்வாறு அவாவுடன் விரைகின்றவனுடைய தேரினை நளன் ஊர்ந்ததும் ஏனெனில், முந்தைவினை குறுகியதால். குறுக என்பது இங்குக் காரணப்பொருளில் வந்த வினையெச்சம். குறுகுதல் என்பதற்குச் சிறியதாகித் தேய்தல் அல்லது நெருங்கிச் சேர்தல் என்னும் இரண்டு அர்த்தங்கள் உள. இவைகளில் முதல் அர்த்தத்தை எடுத்துக் கொண்டால், நளனையும் தமயந்தியையும் இதுகாறும் பிரித்துவைத்திருந்த தீவினை தேய்ந்து அகன்றபடியால் அத்தேர் கடுகிச்சென்றது, என்பது பொருள். மற்ற அர்த்தத்தின்படி, நளனும் தமயந்தியும் மறுபடி சேர்வதாகின்ற நல்வினை நெருங்கியதாகையால் அத்தேர் கடுகிச் சென்றது என்பது பொருள். தீவினையாயினும் நல்வினையாயினும், இரண்டும் முன் வினைகளே.

இன்னுமொன்று இச்செய்யுளில் உரைப்பதற்கிருக்கின்றது. "சந்தவிரைத் தார்குன்றா மெல்லோதி" என்று புகழேந்தி தமயந்தியைக் குறிக்கின்றார். நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கின்ற அக்காலத்தில், மலர் மறந்த கூந்தலையுடையவளாய் நகைமுதலியன அதிகம் அணியாமல் இருப்பது மாதர்க்கு இயல்பு. ஆனால் மலர்மாலை ஒருபோதும் நீங்காத கூந்தலை யுடையவள் என்று இப்பாசுரத்தில் வருணிக்கப்பட்டிருக்கின்றனளே.

இதனைத் தெரிந்துகொள்ள தமிழில் பயில்கின்ற அடைமொழிகளின் தன்மைகளை உணரவேண்டும். சில அடைமொழிகள் பொருளின் இயற்கையை மாத்திரம் கூறுவனவாய் அப்பொருளின்கண் யாதொரு சிறப்பையும் குறிக்காமல் வரும்:- "வெண்மதி எழுந்தது" என்னும் வாக்கியத்தில், வெண் என்பது மதி என்னும் சொல்லிற்கு அடைமொழி. அடைமொழியாயிருந்து சந்திரன் வெண்மையாயிருக்கும் என்னும் அதன் இயற்கையையே காட்டியது. சந்திரனில், பச்சைச் சந்திரன் சிகப்புச் சந்திரன் கருப்புச் சந்திரன் வெள்ளைச் சந்திரன் எனப் பலநிறச் சந்திரன்கள் இருக்குமானால், "வெண்மதி எழுந்தது" என்றபோது, மற்ற நிறச் சந்திரன்கள் எழவில்லை, வெண்மை நிறமுடைய சந்திரனே எழுந்தது எனப் பொருள்படும். அப்படி இல்லையாகையால் வெண் என்ற அடைமொழி சந்திரனுக்கு இயற்கையாயுள்ள தன்மையைச் சொல்கின்றதே யல்லாது பல சந்திரன்களில் சிறப்பாக எந்தச் சந்திரன் என்பதைப் பிரித்துக்காட்ட வரவில்லை. ஆனால் "வெண் தாமரை கொண்டுவா", என்போமாயின் அப்பொழுது வெண் என்னும் அடைமொழி செந்தாமரையை விலக்கி வேண்டப்படுவது வெண்டாமரை என்பதைக் குறிப்பித்துக் காட்டுகின்றது. "பச்சைப்புடவை உடுத்து வந்தாள்," என்றால், வெள்ளை கருப்பு நீலம் சிகப்பு மஞ்சள் ஆதிய வருணங்களமைந்த புடவைகள் அல்லவெனக்குறித்து, அவள் உடுத்துவந்த புடவை பல நிறங்களுள் பச்சைநிறத்தது என்பதை அப்பச்சை என்னும் அடைமொழி தெரியப்படுத்துகின்றது. இவ்விதம் பலவற்றினின்று ஒன்றைப் பிரித்துக் காட்டுதற்கு வருகின்ற அடைமொழியைச் சிறப்

படைமொழி யென்றும், ஒன்றிற்கு இயற்கையாயுள்ள தன்மையை மாத்திரமே காட்டும் அடை மொழியை இயற்கை அடைமொழி யென்றும் கூறுவர். 'வெண் மதி' என்பதில், வெண் இயற்கை அடைமொழி (Descriptive epithet). 'வெண்தாமரை' என்பதில், அவ்வெண் சிறப்படைமொழி (restrictive epithet). "எல்லாம் வல்ல கடவுள்" என்னுங்கால், ஒன்றும் இயலாத கடவுள் வேறொன்று இல்லையாகையால் 'எல்லாம் வல்ல' என்பன இயற்கை அடைமொழிகள். 'அறிவுடைய மனிதனைக் கண்டேன்' என உரைக்குங்காலையில் அறிவு இல்லாத மனிதரும் இருக்கின்றன ராகையால், அன்னவரை விலக்கி, அறிவுடைய வொருவனைச் சிறப்பித்துக் காட்டுவதால், அது இங்குச் சிறப்பு அடைமொழி யாகும்.

இயற்கை அடைமொழியும் சிறப்பு அடைமொழியும் அல்லாமல் இன்னு மொருவித அடைமொழியும் தமிழ்ப்பாசுரங்களில் பயின்று வருவதுண்டு. அதனைச் சாதி பற்றி வந்த அடைமொழி என்பர். அரசமாது என்று ஒருத்தியிருந்தால் அவள் கூந்தலிலே எப்பொழுதும் மாலை அகலாது இருக்கும் என்று வேறொன்றையும் கவனியாது கூறிக்கொண்டு வருவது மரபு."தாமம் சேர் ஓதித்தமயந்தி" என்று முன் (கலிதொடர்காண்டம் 142வது செய்யுள்) கூறியதும், "சந்தவிரைத்தார் குன்று மெல்லோதி" என்று இச்செய்யுளில் கூறியதும், தமயந்தியின் கூந்தல் பூவணிந்து இருக்கும் நிலையை வருணிப்பனவல்ல. அவை, அக்கூந்தலுக்கு இவ்விதம் எப்போதும் மாலை அணிந்திருக்கும் தன்மை உளது என்பதை மாத்திரம் காட்டுகின்றன. அதனால்தான் அதற்குச் சாதி அடை என்ற பெயராயிற்று. அதாவது, இருந்தாலும் இல்லாமற்போனாலும் அந்தச் சாதிக்கு உரிய அடைமொழிகளைக் கொடுத்துச் சொல்லும் வழக்கத்தைக் குறிக்கின்றது. முன் (கலிதொடர்காண்டம், 133-வது செய்யுளில்) நாடு நகரம் அரசெலாம் தோற்றுச் சென்ற நளனை "முடி மன்னன்" என்றதில் 'முடி' என்பது இவ்விதம் சாதி பற்றி வந்த அடைமொழியாகும். பின், இக்கலிநீங்கு காண்டம் 24வது செய்யுளில் நளனைத் 'தேர்வேந்தன்' என்றும் (37வது செய்யுளில்) 'படைவேந்தன்',என்றும், தேரும் படையும் அவனுக்கு இப்பொழுது இல்லாதிருந்தும், அழைக்குங்காலையில், தேர் படை என்பன அரசனுக்குரிய சாதி பற்றிவந்த அடைமொழிகள் என்று கொள்ளல் வேண்டும்.

மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே— தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதில்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 45.

பொழிப்புரை:- முதற் சுயம்வரத்தில் தோற்றிருந்த போதிலும் சலிக்காது தமயந்தியைப் பெறுவேன் என்று பின்னும் முற்படுகின்ற இருதுபன்னன் ஏறிவர, கொடுமைக் கலியால் சூதாட்டத்தில் மயங்கிக் கெட்ட நளன் கோல்கொண்டு செலுத்திய குதிரைகள், 'மேல் ஆடை விழுந்தது, அதை எடு' என்று இருதுபன்னன் சொல்வதற்குள் இருபத்துநான்கு காததூரம் கடந்துவிட்டன.

குறிப்பு:- குதிரையின் உளம் அறிந்து மந்திரத்தால் ஓட்டும் வல்லமையுடையவன் நளன் ஆகையால், அக்குதிரைகள் இத்துணை வேகமாய் ஓடின.

ஆய தறிந்த வயோத்தியர்கோ னுங்கதற்கு
மேயவிறும் பூதினனுய் வேட்கைமிகத்-தூயதிறல்
அன்னவன்பா லவ்விஞ்சை யாயுமாறி யாதென்ன
உன்னுவான் றன்னுள்ளே யோர்ந்து. 46.

பொழிப்புரை:- அவ்வண்ணம் ஓடியதைக் கண்ட அயோத்திமன்னன் ஆச்சரியம் அடைந்தவனாகி, தானதனைக் கற்கவேண்டும் என்னும் விருப்பமும்மிகுந்து, தூய்மையான திறமைவாய்ந்த அந்த வாகுகனிடத்தில் அந்தஅசுவ மந்திரத்தை ஆய்ந்து அறிகின்ற வகை யாது என்று தன்னுள்ளே சிந்திப்பவனாயினான்.

### இலக்கணம்.

உயிர் நெடில்களும், ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் என்னும் மெய்யெழுத்துக்களும், ஃ என்ற ஆய்த எழுத்தும் அளபெடுத்துத் தத்தம் மாத்திரைக்கு அதிகமாக ஒலிக்கக்கூடும் என்பதைப் பார்த்தோம்.

ஐ, ஔ, உ, ஆகிய மூன்று எழுத்துக்களும் தத்தம் மாத்திரையிற் குறுகி ஒலிக்கலாவதையும் கண்டோம். அப்படிக்குறுகி ஒலிக்கும்போது அவ்வெழுத்துக்கள் முறையே, ஐகாரக்குறுக்கம் ஔகாரக் குறுக்கம், குற்றியலுகரம், எனப் பெயர் பெறும். இ என்னும் உயிர் எழுத்தும் சில சமயங்களில் அதற்குரிய ஒரு மாத்திரையினின்றும் குறுகி அரைமாத்திரை பெற்று ஒலிக்கக் கூடும். அப்பொழுது அதற்குக் குற்றியலிகரம் என்பது பெயர்.

குற்றியலுகரத்தில் முடிகிற ஒரு வார்த்தைக்குப் பின்னால் அதனைத் தொடர்ந்து யகரவரிசையில் வருகிற உயிர்மெய்யெழுத்தில் ஆரம்பிக்கின்ற சொல் வருமானால், அந்தக் குற்றியல் உ கரம், இகரமாகத் திரியும். அப்படித்திரிந்த இகரந்தான் குற்றியல் இகரமாம். முன் கலிநீங்கு காண்டம் 12-வது செய்யுளில் 'நீ இங்கு வந்ததி யானினைந்து' என்று இரண்டாவது அடியில் வந்திருப்பதை எடுத்துப் பாருங்கள். வந்தது யான் நினைந்து எனச் சொல்கள்பிரியும். அதனில், வந்தது என்னுஞ் சொல்லில் ஈற்றில் து என்னும் எழுத்தில் உள்ள உகரம் குற்றியலுகரம். (வந்தத் உ). இந்தக் குறுகிய உ விற்குப் பின்னால் அடுத்த வார்த்தையாகிய யான், என்பதின் முதல் எழுத்தாகி யா வந்திருக்கிறது. ஆகையால் அந்த உகரம் இகரமாகத்திரிந்துவிடும். திரிந்துவந்து (த் இ) 'வந்ததி யான்' என நிற்கின்றது. அப்படி யகரம் வருவதால் உகரம் மாறி ஆகின்ற இகரத்திற்கு உச்சரிப்பில் அரைமாத்திரை தான் கொடுக்க இயலும். அது குற்றியலிகரம்.

அந்தக் குற்றியலுகரம் என்னதொடர்க் குற்றியகரமாயிருந்தாலும் சரி, யகரம் பின்னால் வந்தால் இகரமாக மாறியே தீரும். வந்தது யான், என்னும் உதாரணத்தில் உள்ள குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். அது 'வந்ததியான்' எனக் குற்றியலிகரமாகத்திரிந்தது. இந்தச் செய்யுளில் "ஆயும் ஆறுயாது என்ன" என்றுவரும் மூன்றுமடியில் ஆறு யாது என்பது 'ஆறியாது' எனமாறி இருப்பதைப் பாருங்கள். ஆறு, என்பதன் ஈற்றிலுற்ற உகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம், அதன்பின், யாது என யகரத்தில் துவக்குகின்ற வார்த்தை வந்ததால் இந்த உகரம் இகரமாகத்திருந்து ஆறியாது என ஆயிற்று. மற்றத்தொடர்க் குற்றியலுகரங்களும் அவ்வாறே திரியும்.



குற்றியலுகரமாயில்லாது முற்றியலுகரமாயிருந்தால் அது யகரம் வர இகரமாய்த்திரியாது. கடு யாது, என்னுங்கால் கடு என்பதன் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம் அன்று; ஆகையால் கடுயாது என்றே நிற்கும், கடியாது என ஆகாது. மற்றுக் காடு யாது, என்பது காடியாது என ஆகும். ஏனெனில் கா நெடிலாகையால் டு விலுள்ள உகரம் குறுகிற்று. எனவே யகரம் வர அது இகரமாய்த் திரிந்தது.

இனி, பெட்டி யாது, பொன்னி யாவள், என்பன போன்ற உதாரணங்களில், பெட்டி, பொன்னி என்னும் இவ்வார்த்தைகளின் ஈற்றிலுள்ள இகரம், குற்றியல் உகரம் திரிந்து ஆகிய இகரங்கள் அல்ல. வார்த்தையே இகரத்தில் முடிகின்ற வார்த்தைகள் அவை. ஆகையால் பின்னால் யாது யாவள் என யகரத்தில் துவக்குகின்ற சொற்கள் வருவதால் பெட்டிபொன்னி என்னும் சொற்களின் ஈற்றிலுள்ள இகரங்கள் குற்றியலிகரம் ஆகமாட்டா.

ஆதலால், யகர வரிசையைச் சேர்ந்த எழுத்துக்களை முதலில் உள்ள சொல் பின்வருவதால் குற்றியலுகரம் இகரமாகத்திரிய அவ்விகரம் குற்றியலிகரம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். இன்னொரு இகரமும் குற்றியலிகரம். அது மியா என்ற அசைச் சொல்லில் ம் என்னும் மெய்யின்மேல் ஏறியிருக்கும் இகரம். இந்தச்சொல் யாரையாவது முன்னிலைப் படுத்திப் பேசும்போது கேண்மியா, செல்மியா, உண்மியா, எனச் சேர்த்துக் கொள்கின்ற இடைச்சொல். இதற்குத் தனியாக வொன்றும் பொருளில்லை. கேள், சொல், உண், என்பதுதான் பொருள். இந்த மியாவிலுள்ள இகரமும், குற்றியலுகரம் திரிந்து ஆன இகரத்தைப்போல், குற்றியலிகரமாம். இவைகளெல்லாம் அரைமாத்திரையே பெறுவதை. உச்சரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

## அலகிலிவ் விளையாட்டுடையான்.

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லிவ்விளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நங்களே.

என்ற பாடல் கம்பராமாயணத்திற்குக் காப்புச் செய்யுளாகக் காணப்படுகின்றது. இது பலவகையாலும் திருவாய்மொழியினை ஞாபகப்படுத்துவது.

துன்பமும் இன்பமுமாகிய
செய்வினையாய் உலகங்களுமாய்
இன்பமில் வெந்நரகாகி
இனியநல்வான் சுவர்க்கங்களாய்
மன்பல் லுயிர்களுமாகிப்
பலபல மாயமயக்குகளால்
இன்புறும் இவ்விளையாட்டுடையானைப்
பெற்று ஏதும்அல்லலிலனே.

என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

இங்கு, லீலாவிபூதியாகிய உலகங்களை யெல்லாம் ஈசன் படைத்து அளித்து அழிக்கின்றான்; இது அவன் திருவிளையாட்டு; இவ்விளையாட்டாக லீலா விபூதியை உடையவன் ஈசன்; என்பதை இவ்விளையாட்டுடையான் என்பதால் நம்மாழ்வார் அழகுறக் குறிப்பிடுகிறார். அவர்மொழிகளைப் பொன்னேபோல் போற்றும் கம்பர் அவ்வாறே அச்சொற்றொடரைத் தமது காப்புச் செய்யுளிலே அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

துன்பமும் இன்பமுமாகிய செய்வினைகளைக் கொண்டு ஈசன் உலகங்களை ஆக்குகின்றான் என்பதைக் குறிக்கும் முதலடியின் கருத்தையே கம்பநாடரும் 'உலகம் யாவையும்தாம் உளவாக்கலும்' என்பதினாலே விளக்குகின்றார். 'உலகம் யாவையும் ஆக்கலும்' என்று பாடாது 'தாமுள' என்னும் சொற்களின் சேர்த்தி எதற்கு என்றால், ஈசன் தளர்வின்றியே எங்கும் என்றும் பரந்து உடல்மிசை உயிரெனக் கரந்து உளன் என்பதைக் குறித்தற்பொருட்டே. இவ்வுண்மையையே, ஈசன் உலகத்தை நிருமித்து அதற்குள் அநுப்பிரவேசித்தான் என்று உபநிடதம் கூறும். அவ்வாறு அநுப்பிரவேசித்தே, உலகங்களை உள்ளனவாக ஆக்குகின்றான் என்பதைச் சுட்டி விளக்குவாராய்த் 'தாமுள வாக்கலும்' என்றார் கம்பர்.

'காத்தல்' என்னாது 'நிலைபெறுத்தல்' என்பதிலும் பதஸ்வாரஸ்யம் உண்டு. உயிர்களும் உலகம் யாவையும் நிலைபெற்று இருத்தல் அவன் அநுப்பிரவேசத்தாலேயே. அவன் இன்றேல் நாம் ஒரு நிமிஷமும் நிலைபெறோம்; அவனுடைய சக்தியே நம்மை எப்பொழுதும் தாங்கி நிலைபெறுத்துகின்றது. காத்தல் என்பது ஒருவேளைச்செய்தியாகவும்கூடும். அவ்வாறு சதாகாலமும் நம்மைத் தாங்கி நிற்பதால், அவனே உலகம் யாவையும் நிலைபெறுத்துகின்றான் என்று விளக்கவே,'நிலை பெறுத்தலும்' என்று கம்பநாடர்பாடுகின்றார். 'அழித்தல்' என்று கூறாது, 'நீக்கல்' என்று கூறியிருப்பதுவும் கவனிக்கத்தக்கது. பிரளயகாலத்திலே உலகம் யாவையும் முற்றும் அழிவதில்லை. ஈசனுடைய வயிற்றிலே அவை அணுக்களாக அமர்கின்றன. உலகவடிவு நீங்கி அப்பொழுது அவை இருத்தலால், அந்தநிலைமையை 'நீக்கல்' என்று குறிக்கின்றார்.

பின்பு, இவ்விளையாட்டானது, நீங்கலா விளையாட்டு என்ற அடைமொழிகளால் குறிக்கப்படுகின்றது. இதனால் 'திரிபாத்' விபூதி போலவே இந்த லீலா விபூதியும் நித்யமாய் அனந்தமாய் இருப்பது என்பது விளக்கப்படுகின்றது.

'அலகிலா விளையாட்டுடையார்' என்பதினும்'அலகிலிவ்விளையாட்டுடையான்' என்பதே சிறந்த பாடமாகும்.

விளையாட்டுடையார் எவர் தலைவர் அன்னவர் என்ற பன்மையினும், உடையான் எவன் தலைவன் 'அன்னவன்' என்று கொள்வதே சிறந்தது.

'எவன்' என்ற சொல்லால் திருவாய்மொழியின் தொடக்கத்திலே சொல்லப்பட்ட பரம்பொருள் சூசகமாகின்றது.

உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

இவ்விளையாட்டு உடையவன் யவன் அவன் தலைவன் என்பது இப்பாசுரத்தைத் தழுவியிருத்தல் காண்க.

'அன்னவர்க்கே சரண் ஆகிய நாங்களே' என்பது ஒரு பாடம். நங்கள் சரண் ஆகிய தேவன் என்றுசொல்வது அழகு. அவர்க்கு நாங்கள் சரண் என்பது அவ்வளவு அழகிய சொல்லாக அமையவில்லை. வலிந்தே பொருள்கொள்ள வேண்டியதாகின்றது. இந்த அடியினைச் 'சரண் ஆங்கள்' என்று பிரித்து, சரண் ஆகுங்கள் என்று கம்பநாடர் உபதேசித்தார் என்று கொள்ளவும்கூடும்என்பர் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணமாசாரியர் அவர்கள். அவ்விதம் கொண்டாலும், "நாம் ஈசனுக்குச் சரண் ஆகின்றோம்," நாம் இல்லாவிட்டால் ஈசனுக்கு வேறுகதி யில்லை என்ற தொனிப்பொருள் மறைவதில்லை. எனவே, இவ்வடியானது சிதைந்து உருமாறியிருக்கலாம் என்று ஊகிக்க இடம் உண்டாதல் காண்க.

இவ்வரி இவ்வாறு இருக்கலாம் என்று எனக்குத் தோற்றுகின்றது. "தலைவன் யாவர்க்கும் சரண் நங்களே" என்று இவ்விதமான பாடம் உண்டோ என்பதை ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்தோர் கூறக்கூடும். அவ்வாறு அவர்கள் எடுத்துக்காட்ட முன்வருவார்கள் என்று நம்பியே இதை இங்குக் கூறத் துணிந்தேன்.

"பிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன்சரணே" என்பது திருவாய்மொழி. அடுத்த பாசுரத்திலே பிரானை 'என்சரண்' என்பர் நம்மாழ்வார். ஆகவே இங்குக் கம்பநாடரும் தலைவனாகிய ஈசன் யாவர்க்கும் சரண் 'நங்கள் சரண்' என்று கூறுவாராய்ச் 'சரண்' என்ற மொழியினை இடையிலே இட்டு அமைத்து 'யாவர்க்கும் சரண் நங்களே'என்று பாடியிருத்தல் கூடும். இங்கு ஆறும்வேற்றுமை யுருபினால் தமக்கும் தம்மவர்க்கும் ஈசன் சரண் ஆயினான் என்பதைக் குறித்து, நாலாம்வேற்றுமை யுருபினால் 'அவ்வீசன் யாவர்க்கும் சரணாகத்தகுந்தவன்' என்று விளக்குவதாகக் கொள்ளல் வேண்டும். இவ்விதம் திருவாய் மொழியிலுள்ள கருத்துக்களையும்சொற்றொடர்களையும் காப்புச் செய்யுளிலேயே அமைத்ததனால் கம்பநாடர் சடகோபரந்தாதிகளிடம் தமக்கிருந்த பெருமதிப்பையும் அவருடைய அடிபற்றியே இராமாயணம் பாடியதையும் குறிப்பிடுகின்றார் அன்றோ! "எண்ணுமாறு அறியமாட்டேன், யாவையும் யாவரும் தானே' என்ற பாசுரப்பகுதியும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆகவே, காப்புச் செய்யுளைப் பின்வருமாறு கொள்வதே ஏற்புடைத் தாகின்றது.

உலகம் யாவையும் தான்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லிவ்விளை யாட்டுடை யான்யவன்
தலைவன் யாவர்க்கும் சரண் நங்களே.

'யாவர்க்கும்' என்பதைத் 'தலைவன்' என்ற சொல்லோடு கூட்டி அவன் 'அயர்வரும் அமரர்கள் அதிபதி' யாதலால் 'யாவர்க்கும் தலைவன்' என்றும், 'அத்தலைவன் நங்கள் சரண்' என்றும் கூறினாராகக் கொள்ளுதலும் பொருந்தும்.

இனி, 'இன்புறும் இவ்விளையாட்டுடையான்' என்பதற்கு வ்யாக்னங்கள் கூறுவனவற்றைச் சுருக்கமாக இங்கு உரைத்தல் தகும்.

"பிராட்டியுடைய ப்ரீத்யர்த்தமாக ஜகத்ஸ்ருஷ்ட்யாதி லீலைகளைப் பண்ணி யருளுகிறவன்' என்றும் 'நிகில ஜகதுதய விபவலயாதி லீலன்' என்றும் ஆறுயிரப்படி கூறும். "இவற்றைத்தன் தயையாலே ரக்ஷிக்க நினைத்தால் அது இவற்றிற்கு அநிஷ்டமாயிருக்கும் இருப்பு அவனுக்கு, ஹாஸ்ய ஹேதுவாய், அவ்வழியாலே லீலாரஸஸாதநமாய்விட்டது;கொடுத்த சைதந்யந்தான் பொதுவாய் ருசிபேதத்தாலே வழிவிலங்கிப் போய் அநர்த்தத்தை விளைத்துக் கொண்டிருக்கிறபடியைக்கண்டு 'நாம் ஒன்றை நினைத்துச்செய்ய இவை ஒன்றைச் சூழ்த்துக்கொண்டபடி கண்டாயே' என்று பிராட்டி முகத்தைப்பார்த்து ஸ்மிதம் பண்ண, அது கோல் விழுக்காட்டாலே லீலாரஸமாய்த் தலைக்கட்டும்" என்று ஈட்டிலுள்ள வ்யாக்யானம்.

# குலசேகரர்

## பாட்டி கதையே பாவலன் பாட்டு

153 பக்கத் தொடர்ச்சி

பாவலனைப் போன்றிருக்கும் பாட்டு. பெருமாளைப் போலிருக்கும் பெருமாள் திருமொழி. பெருமாள் இத்தகையார் என்றறிந்தாலன்றோ இப்பேச்சால் பயனுண்டு! குருபரம்பரை என்னும்நூல் குலசேகரரை நெருங்கிப் பழகியதுபோல அவர்கதையை முதலிருந்து முடிவுவரைக் கூறிப்போகின்றது. இதனைக் கட்டுக்கதை என இழித்துக் கூறுவர்ஒருசாரார். உண்மைக் கதையானால்அக்கதைக்கும் பெருமாள்திருமொழிக்கும் உள்ள ஒற்றுமையை ஒரு சிறிது உணரலாம். கட்டுக் கதையானால் நமக்கு அது உண்மைக் கதையிலும் உயர்ந்ததாகும். கட்டுக்கதையைக் கட்டிவிடுவதாக இருந்தாலும் ஏதேனும் ஒன்றை அடிப்படையாக வைத்துத்தானே கதைகட்டிவிட்டிருத்தல் வேண்டும். "சிங்கமே நின்னடிக்கே போதுகின்றேன்" என்று திருநாவுக்கரசு பாடினால் அதுகொண்டு அவரை ஆண்டவன் கோளரியாக ஆண்டனர் என்று கதைகட்டத் தொடங்கினர். கோளரியாக ஆண்டனர் என்றார்களே யன்றிக் குதிரையாக ஆண்டனர் என்று கூறவரவில்லையே. ஆகவே குலசேகரரைப்பற்றிக் கதை கட்டியவர்களும் அவரைக் குறித்துத் தாம் அறிந்த ஒன்றைச் சுவராக வைத்துத் தான் மேலே ஓவியம் எழுதத் தொடங்கியிருப்பர். இனிப் பெருமாளைப்பற்றி யறியப் பெருமாள்திருமொழி யொன்றுதவிர வேறொன்றும் இருந்ததில்லையே. அப்பெருமாள் திருமொழியைப் படித்த அறிஞர் ஒருவர், அப்பாடல்களைப் பாடியவர் எத்தகையராகி இருந்திருக்கலாம் என்று கணக்கண்டு இக்கதையை எழுதியிருத்தல் வேண்டும். அக்கட்டுக்கதை அவ் அறிஞரது ஆராய்ச்சியின் முடிவுரையாதலின் அஃதே யாம் வேண்டுவது.

ஆராய்ச்சியின் முடிவைக்கதையாகவோபாடவேண்டும் என்றோர் ஐயம்இங்கெழுதல் இயல்பே. அவ்வாறு கதையாகப் பாடினால்தான் மக்களது உள்ளத்தில் பசுமரத் தாணிபோல் பதியும். ஐயுணர்விற்கு அப்பாற்பட்ட அறிவுப்பொருளையும் ஐயுணர்விற்கு அகப்படும் பொருள்களாக உவமைவாயிலாக உணர்த்துவது நம்பெரியோரது வழக்கமாயிற்று. அனைத்துயிர்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள அன்பு ஒற்றுமையை அறிஞர் எவ்வாறு விளக்கினர்? கண்ணனைப் பெண்கள் கட்டித்தழுவி ஒரு நொடியில் அனைவரும் களித்துநின்ற கதையாகப் பாடியே விளக்கினர். இன்னிசையினைக் காதால் கேட்பதன்றிக் கண்ணால் காணமுடியாது. ஆனால் அவ்வின்னிசையைக் கேட்டறிந்த ஓவியப் புலவர்கள் இன்னிசைகளை வடிவமும் சாயலும், தகைமையும் நாணமும் நகையும் உடைய பெண்களாக ஓவியம் எழுதிக் காட்டுகின்றனர். நாடி ஓட்டத்தினைக் கையால் தொட்டுப் பார்த்துத்தான் அறிதல்வேண்டும். ஆனால் அதன் வேற்றுமைகளைப் பிறரறியுமாறு கூறவந்த மருத்துவநூல்கள் அந்நாடி ஓட்டத்தினை முயலோட்டம் மயிலோட்டம் முதலியவற்றிற்கு உவமை கூறுகின்றன. அஃதேபோலப் பாட்டைப் படித்துத் தாம் கட்டிய ஆராய்ச்சியின் முடிவைப் பாவலனோடு இணைத்துவிட்டு, அதனை அவன் கதையாகப் பாடுவது பெரும் புலவருக்கே ஆவதொன்றாம். பாட்டி கதையானது பாவலன் பாட்டாகிப் பயன் பெறுகின்றது.

உண்மைக் கதையினும் இக்கதைக்கு ஓர் ஏற்றமுண்டு. ஒருவனைப் புகைப்படம் பிடிக்கிறோம். அதில் படிந்தவடிவம் ஒருவகையாக விளங்கும். அவனது வடிவினையே ஒரு கைசிறந்த ஓடாவியை எழுதச் சொன்னால் வேறுவகையில் எழுதுகின்றான். ஓடாவி இருந்ததை இருந்தபடி எழுதாது எந்த நிலையில் பல உறுப்புக்களையும் பயன்படுத்தி வைத்தால் எழுதப்படுவோன் உள்ளநிலைமுழுதும் ஒருங்கே வெளியாகுமோ அந்தநிலையில் வைத்து எழுதுகின்றான். பச்சையப்ப முதலியாரது ஓவியத்தைப் பலர் பார்த்திருப்பர். இயற்கை யழகினிடையே ஒரு கோவிலுக்கெதிரே பச்சையப்பமுதலியார் நிற்கின்றார். செல்வப்பெருக்கை அவரது உடையும் உயர்ந்தஅணிகளும் விளக்குகின்றன. அவர் நின்ற நிலையிலேயே அவரது ஒழுக்கத்தழுகு ஒளிர்கின்றது. பள்ளியில் பயிலும் சிறுவனொருவனை அருளொடும் அன்பொடும் மனமிரங்கிப் பாராட்டுகின்றார். பள்ளிச்சிறுவர்களுக்காகத் தமது பொருள்முழுதினையும் எழுதிவைத்துப்போன அவரது மனநிலையை இவ்வோவியம் எளிதில் விளக்குகின்றது. ஆனால் இளஞ்சிறுவனிடம் அன்புபாராட்டும் நிலைமை அவரது வாழ்நாளில் ஒருநாளேனும் அப்பெரியாருக்கு ஏற்படாமல் இருந்திருக்கலாம். இருந்தாலும் அவரது உண்மை நிலையை அவ்வோவியம் விளக்குவதுபோல அவரது புகைப்படம் ஒன்று இருக்குமாயின் அஃது விளக்காதன்றோ! இருந்ததை இருந்தபடி எழுதியது புகைப்படமே யாகும். உண்மைநிலையை உணர்ந்தெழுதியதே ஓவியமாகும். புகைப்படம் போன்றது வரலாறு; ஓவியம்போன்றது உணர்வினிற்சிறந்தோர் கணக்கண்டெழுதியகட்டுக்கதை. ஆகலின், குலசேகரரைப்பற்றிய கதை அவரது உண்மைநிலையை விளக்குவதுபோல அவரது உண்மைவரலாறு ஒன்றிருக்குமாயின் அஃது விளக்காது எனலாம். கட்டுக்கதை இவ்வகையால் ஏற்புடைத் தாகின்றது.

"அரிஸ்டாடல்" என்ற யவன நாட்டுப் பேரறிஞர், கதைக்கும் வரலாற்றுக்கும் வேற்றுமை காட்டுவர். வரலாறு நடந்ததைக் கூறுவதாம், கதையோ உண்மையைக் கூறுவதாம். ஒருவனது வரலாற்றிலே அவனது வாழ்க்கையின் உண்மைகள் நன்கு புலனாவது இல்லை. எங்கிருந்தோ மின்னல்போல வந்து பிறக்கின்றான். மறுபடியும் எங்கேயோ பறந்து மறைகின்றான். அவனோடு உலகத்திற்குள்ள தொடர்பு, அவன் முடிக்க வந்த வேலை, அவன் வாழ்க்கையின் மறைபொருள், நெளிவு சுளுவுகள், இவை எல்லாவற்றையும் கடவுள் தவிர வேறொருவரும் தெரிந்துகொள்ள முடியாது. அவரவர்கள் வாழ்ந்த காலத்து மக்கள் தமது விருப்பிற்கும் அறிவிற்கும் ஏற்ப எதைஎதை நினைவில் வைத்துக்கொள்கின்றார்களோ அஃதஃதே அவர்களது வரலாறாகி முடிகின்றது. பாவலனோ தனது தெய்வத் திருவருளால் இவ்வுண்மையினை யறிந்து ஒரு கதை எழுதுகின்றான். தலைவனது முன்னையநிலை, பின்னைய நிலை நடுவுநிலை அவனது வாழ்க்கை, வாழ்க்கையின் பொருள் முதலியவற்றைத் திருவருள் திறத்தால் படைத்துப் பாடுகின்றான். கடவுளுக்குத்தான் தெரியும் என்று கண்குருடாகிக் கதற வேண்டுவதில்லை. அவன் கூறுவன உள்ளபடி நடந்தன அல்ல, என்று கூறலாம். ஆனால் அவன் கூறவந்தவை பொருள்களின் உண்மைநிலையை நமக்கு அறிவூட்டுகின்றன. அது தானே நமக்கு வேண்டுவது. ஊரும் பேரும் நமக்கேன்? கடவுளின்கருத்தையே அறிவிக்கின்றது கதை.

அரும்பெரும் புலவர்ஒருவர் தமது ஆராய்ச்சியின் முடிவைக் கதையாகப் பாடியதன் ஏற்றம் கண்டோம். இனி அவர் காட்டிய முடிவு அமைவுடையதோ என்று காணல் வேண்டும்.

குருபரம்பரை, குலசேகரர் பிறந்த ஆண்டு திங்கள் நாள் எல்லாம் கூறுகின்றது. கலிபிறந்த இருபத்தெட்டாவதாண்டாகிய பராபவ ஆண்டில், மாசித் திங்களில் திங்கள்வளர்ந்து நிறையத் தொடங்கிய பன்னிரண்டாம் நாளில் சோழபட்டணத்தில் கௌஸ்துப மணியின் உறுப்பாக உலகில் பிறந்தாராம்.

கும்பே புநர்வஸௌ ஜாதம் கேரளே சோள பட்டணே
கௌஸ்துபாம்சம் தா ரீசம் குலசேகர மாச்ரயே

என்றவோர் வடமொழிப் பாட்டுண்டு. திருமாலின் மார்பில் விளங்கும் மணிக்குக் கௌஸ்துபம் என்று பெயர். திருமாலின் திருமறு மார்பில் திகழும் மணியாகப் பெருமாள்திருமொழியும் சிறந்து விளங்குவதால் இவ்வாறு கூறினார்கள் போலும். திருவருள் நிறைந்த தெய்வப்புலவர் என்பதை இவ்வாறு கதையாகக் கட்டிவிட்டார்கள். திருநாட்டில் இருந்து இந்தச் செய்தித் திருவோலை அனுப்பியவர் யார் என எம்மைக் கேட்கவேண்டா.

குலசேகரர் தாம் சேரர்பெருமாள் என்பதனையும், பாண்டிநாடு சோழநாடு கொங்கநாடு என்ற நாடுகளை எல்லாம் வென்று தமிழ்நாட்டில் தனிக்கோலோச்சியதனையும், தாமே தமது பெருமாள்திருமொழியில் பாடியிருக்கின்றார். இனி, த்விஜந்மவரர், பத்மசரர் என்றவர் அருமறையின் அரும்பொரு ளுணர்ந்து, பாவலர்களில்சிறந்தோராய்த் திகழ்ந்து, குலசேகரரது நண்பர்களாய் வாழ்ந்தனர். இதனையும் தாமே தமது முகுந்தமாலையின் முடிவில் ஆழ்வார் அருளிச் செய்கின்றார்.

யஸ்ய ப்ரியெள ச்ருதி தரௌ கவிலோக வீரௌ
மித்ரே த்விஜந்மவர பத்மசராவ பூதாம்
தேநாம்பு ஜாக்ஷ சரணம்புஜ ஷட்பதேந
ராஜ்ஞா க்ருத க்ருதிரியம் குலசேகரேண

[எவருக்கு மறைபொருளுணர்ந்து பாவலரிற் சிறந்த த்விஜந்மவரரும் பத்மசரரும் நண்பர்களோ, அவரால், தாமரைக் கண்ணரின் திருவடித்தாமரை சேர்ந்த வண்டுபோன்ற குலசேகரர் என்ற அரசரால், இந்தநூல் செய்யப்பட்டது] இதனையும் பின்னேஒருவர் எழுதிச்சேர்த்தார் என்முல் பேசவெமக்கு வாயில்லை. இவ்விரண்டு குறிப்புக்களைவிட்டால் குலசேகரரைப்பற்றிச் சான்றுபகர வேறென்றும் இல்லை.

இவற்றிற்குமேலும் சான்றுபகரும் குருபரம்பரை தான் என்ன கூறுகின்றது? ஆழ்வார் அரசராய் வீற்றிருந்தபோது ஆண்டவன் அணுக்கத் தொண்டரின் கூட்டுறவு ஏற்படுகையால் அவரும் அடியவர்ஆயினர். அன்பு மேலீட்டினால், அரங்கநகர் அடைந்து, அரவணையிற் பள்ளியானைக் கண்ணாரக்கண்டுஉகக்கவேண்டுமென்ற பித்தேபிடித்துத் திருவரங்கத்தே தித்திக்கும் தேனினை யுண்டவர். முன்னைநிலைக்குத் திரும்புவதில்லையாதலின், அரசரும் அரங்கநகர் அடைவாரானல் தம்மூருக்கு இல்லாது போவர் என்று அமைச்சர்கள் அறிந்து கொண்டனர். அரசன் அரங்க நகருக்குப் புறப்படுவதைத் தடுப்பதற்குத் தம்மாலான சூழ்ச்சியனைத்தும் செய்தனர். அரசனரின் அடிமைத்திறத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரைத் தடுத்தனர். அரங்கனைக் காண்பதினும் அடியவரைக் காணல் அரும்பேறும். அதனை உணர்ந்த அமைச்சர்கள் ஆழ்வார் அரங்கநகர் புறப்படும்போதெல்லாம் அவரெதிரே அடியவர்குழாத்தைக் கொண்டுவந்து விட்டனர். ஆழ்வாரும் ஒவ்வொருமுறையும் அரங்கநகருக்குப் போதலை ஒத்திவைத்து அடியவரை வழிபடத்தொடங்கினர். ஒவ்வொருமுறையும் திருவரங்கச்செலவு இவ்வாறு தடைபட்டது. ஆனல் அடியவர்குழாமோ நாளுக்குநாள் மிகுதியாய்க்கொண்டே வந்தது. இந்த முன்னிலையில்தான் ஆழ்வார் முகுந்தமாலை பாடினராம்.

ஆழ்வார், அடியவரோடும் கூடி இராமர்கதையை அன்போடும் ஆர்வத்தோடும் கேட்டுவந்தவர். இராமர் கதையை எடுத்துரைத்துவந்த பெரியார் ஒருநாள், கரன் முதலியோரோடு இராமர் தனியே போருக்குச் சென்ற கதையை வால்மீகி எழுதியபடியே படித்தார்.

*சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம்*
*ஏகச்சராமோ தர்மாத்மா கதம்யுத்தம் பவிஷ்யதி?*

[கொடுந்தொழில் புரியும் அரக்கரோ பதினாலாயிரவர். தர்மாத்மாவான இராமனே ஒருவன். போர் எவ்வாறுமோ?]

என்று வால்மீகியே வயிறுபிடிப்பதைக் கேட்ட அரசர்பெருமான் தம்மையும் உலகையும் மறந்து, கதையொடு ஒன்றுபட்ட கருத்துடையராய்த் தம்மெதிரே போர் நடப்பதாக எண்ணித் தம்முடைய படையைத் திரட்டிக்கொண்டு இராமருக்குத் துணையாகி உதவ விரைந்தெழுந்தார். உடனே அமைச்சர்கள், வேறு சிலரை அரசர் எதிரே வரவிட்டு, வால்மீகி பின் பாடிய பாடலை அரசர்முன் பாடச்செய்தனர். அவ்வாறு எதிர் வந்தவர்களும், [ஹம்

*தம் த்ருஷ்ட்வா சத்ரு ஹந்தாரம் மஹர்ஷீணம் ஸுகாவ*
*பஹுவ ஹ்ருஷ்டா வைதேஹி பர்தாரம் பரிஷஸ்வஜே*

[பகைவரைக் கொன்று, முனிவருக்கு இன்பமருளி வந்த தனது அகமுடையாரைக் கண்டு அன்புமேலீட்டால் அவரை அணைத்துக் கொண்டனள் சீதை]

என்ற பாடலை விளக்கிப் போர்முடிந்ததை அறிவித்தனர். இராமர் கதையை படித்துவந்தவர் அந்நாள் முதல் அரசர்எதிரே, இராமருக்குத் துன்பம்வரும் இடத்தைச் சுருக்கியும் அவர் வெற்றிபெற்று விளங்கிய இடங்களை விரித்தும் கூறிவந்தார். அவர் ஒருநாள் வரமுடியாதுபோகவே அவருடைய பிள்ளையார் வந்து கதைசொல்லத் தொடங்கினர். முன்னிகழ்ந்ததொன்றும் அறியாதவர் ஆதலின் எதைச்சுருக்கவேண்டும் எதை விரிக்கவேண்டும் என்பதையும் அறியாதவர் ஆயினர். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றது கேட்டுத் தமது படையுடன் இலங்கையை நோக்கிச்சென்று இடைநின்ற கடலிலே அரசர் பெருமான் நடக்கத் தொடங்கினர். "சீதையைக் கொண்டல்லது திரும்பேன்" என்று சீறி எழுந்தவரைத் திருப்புவதெப்படி என்று எண்ணினர் அமைச்சர். ஒன்று மறியாதுகைவிட்டனர். "திக்கற்றவர்க்குத்தெய்வமேகதி" என்பதல்லவா பழமொழி! இராமரே, சீதையுடன் அரசர் எதிர் தோன்றித் தமது வெற்றியைவிளக்கி, ஆழ்வாரின் அன்பை வியந்து அவரைத் தழுவிக்கொண்டனர். இஃது உருவெளித்தோற்றமா உண்மைத் தோற்றமா என்பதனை உணர்ந்தார்வாய்க் கேட்டறிக.

ஆழ்வார் தமது அரசியலை விட்டு ஆண்டவன் பித்தே பிடித்து அவ்வாறெல்லாம் செய்துபோவதைக்கண்ட அமைச்சர்கள் மனம்மிக நொந்து, "என் செய்வது" என எண்ணலாயினர். அடியவர்களது கூட்டுறவாலேயே அரசர்கெடுகின்முர் என முடிவு கட்டினர். அக்கூட்டுறவை ஒழிக்க வழி தேடினர். அரசர் தமது கோவிலகத்தில் வைத்து வழிபடும் ஆண்டவனுக்கு அணியும் அழகியதொரு பன்மணி மாலையை எடுத்து இவ்வமைச்சர்கள் மறைத்துவைத்தனர். அரசர் அதைத் தேடியபொழுது, அடியவர் அல்லது ஒருவரும் உட்புகுவதில்லையாதலின் அவர்களில் ஒருவனே திருடிச் சென்றிருத்தல் வேண்டும் எனஎடுத்துக்காட்டினர். அடியவர் அனைவோரும் அறவோர் என அறிந்த ஆழ்வார் மனம் புழுங்கினர். குடத்திலே கொடிய பாம்பினை அடைத்து அதற்குள் அனைவரெதிரிலும் தமது கையினைவிட்டு "அடியவர் அதனைத் திருடியிருப்பரேல் இப்பாம்பு என்னைத் தீண்டுக' என்று சூளுரைத்தபோது பாம்பு அவரைத் தொடாது நின்றதால் அடியவர் பெருமையை விளக்கினர். அமைச்சர்கள் அதுகண்டு அஞ்சிநின்று அவரடியில் வீழ்ந்து உண்மையை உரைத்தனர். இனி, இத்தகையாரோடு வாழ்வது இயலாதென்றுணர்ந்த ஆழ்வார் உடனே தமது பிள்ளையாரை அரசராக்கித் தாம் அரசுதுறந்து வெளியேறித் திருமால் கோயில் கொண்ட இடந்தோறும் எழுந்தருளிப் பெருமாள் திருமொழியினை உலகுய்யப் பாடிப் பின்னர்த் திருநாடடைந்து திருமாலின் திருமறுமார்பில் திருமணியோடொன்முயினர். இளை என்ற பெண்ணையும் இறைவனுக்கே மணஞ்செய்து கொடுத்தாராம். கன்னிகழியாதே காலமாய்விட்டது கண்டு இவ்வாறு கட்டிவிட்டனரோ என்பதை உயர்ந்தோரையே கேட்டறிதல் வேண்டும். பாம்புக்குடத்தில் கைவிட்ட கதையை எம்பெருமானர் புகழ்ந்து பாடுகின்முர்.

*ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென் றவர்களுக்கே*
*வாரங்கொடுக்குடப்பாம்பிற்கையிட்டவன் மாற்றலரை*
*வீரங்கெடுத்தசெங்கோற்கோல்லிகாவலன் வில்லவர்கோன்*
*சேரன்குலசேகரன்முடிவேந்தர் சிகாமணியே*

(இதன் தொடர்ச்சி 239 வது பக்கத்தில் காண்க.)



[illegible] பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. முந்துங்கள். விலை அணா 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] ஆங்கில ஆசான் [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]



60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனெருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசைபாக்கம்; சென்னை.

Our Publications.

**Kamban's Kosala.**

By T. N. Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville** and **Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனுட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதிசயம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

**The Educational Publishing Co.,** ***Nungambakam, Madras.***

இந்தியாவிலும் பர்மாவிலும்

## எங்களை நீங்கள் - - -

## - தெரிந்துகொள்ள வேண்டாமா!

கௌரவ நடத்தையும், சீக்கிரத்தில் உங்கள் காரியம் ஆக வேண்டியதையும், தகுந்த சாமான்களையும் நாடி வருவீராயின் எங்களிடம் வாருங்கள். வந்து எங்கள் வர்த்தக முறைகளையும் பொருள்களையுங் கண்டு மகிழுங்கள்.

ஒரே விலையாகப் பேரமில்லாது நாங்கள் சொல்லிவிடுவதால் உங்களுக்கு எவ்வளவு சௌகரியம் நாங்கள் செய்கிறோம் என்பதை மறவாதீர்.

கைத்திற வேலையில் தேர்ந்தவர்களால் நாங்கள் செய்து வைத்திருக்கும் வெள்ளிச் சாமான்களின் அழகை வந்து பாருங்கள். அழகொடு உபயோகமும் சேர்ந்து வீட்டிற் கையாள்வதற்கும் வெகுமதியாய்க் கொடுப்பதற்கும் தக்கவை அவை.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

**ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,**

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

| | | |
|---|---|---|
| **135**, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | **134**, மோகல் தெரு, ரங்கூன். | **313**, எஸ்பளனேட், சென்னை. |

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,

GOLD AND SILVER SMITHS.

| | | |
|---|---|---|
| **135, Big Bazaar,** TRICHY. | **134, Mogul Street,** RANGOON. | **313, Esplanade,** MADRAS. |




(236 வது பக்கத் தொடர்ச்சி.)

[அமைச்சர் செய்த சூழ்ச்சியால் பன்மணிமாலை காணாது போகவே, அமைச்சரால் குற்றஞ்சாட்டப்பட்ட அடியார் ஓரமாய்நின்று, அம்மாலையைத் திருமாலின் செவ்விய அடியார் திருடார் என்று பாம்புக் குடத்தில் கையிட்டவர் குலசேகரர் மாற்றலரது வெற்றியெலாம்கெடச் செங்கோலோச்சியவர் கொல்லி காவலர், வில்லவர்கோன் சேரர், முடிவேந்தருக்கு முடிமணியே போன்றவர்.]

# வர்த்தமானம்

## மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினாங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தொகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினால் நலமாம். அல்லது இப்பொழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்பொழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.

தனவணிகர் நாட்டிலிருக்கும் எமது நண்பர்களுக்குச் சென்ற ஆண்டு பைண்டு வால்யூம் தேவையாயிருக்குமாயின் அவர், விளம்பரவிலைக்குக் கோத்தமங்கலம் ஸ்ரீமான் இராமசுப்ரமணியம் செட்டியாரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்.

சேலஞ் சில்லாவிலுள்ள அரசங்காட்டுப்புத்தூர் என்ற ஒரு கிராமத்தில் பெண்ணாகப் பிறந்த வொரு குழந்தை மூன்றுமாத காலத்திற்கப்புறம் ஆணாகமாறி விட்டதாம். அதற்கு இப்பொழுது ஆறு மாதங்களாகின்றன. இந்த அதிசயத்தை எல்லோரும் வந்து பார்த்துப் போகின்றனராம்.

***

சென்றவாரம், தன்மனைவியை விஷம்வைத்துக் கொன்ற குற்றத்திற்காக விசாரிக்கப்பட்ட சீதாபதி ராவ் என்பவர்க்கு விசாகபட்டணம் ஸெஷன்ஸ்ஜட்ஜ் தூக்குத்தண்டனை விதித்திருப்பதாகத் தெரிகின்றது.

***

பர்மாவிலுள்ள கிறிஸ்தவ மாதர்கள் மதுவிலக்குச் சங்கமொன்று ஸ்தாபித்திருக்கின்றனர். அச்சங்கத்திற்கு 14உ விஜயஞ் செய்திருந்த மகாத்மா காந்தியை மிஸ் மேமாத் என்னும் அம்மையார் பேசும்படி வேண்டிக்கொண்டார். அதற்கிணங்கிமகாத்மாஜிபேசுகையில் பல வருஷங்களுக்குமுன் தென்னாப்பிரிக்காவில் சிலர் குடித்துவிட்டுச் சாக்கடையோரத்தில் புரள்வதைக் கண்டதிலிருந்து தாம் இம்மதுவிலக்கு விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளத் தலைப்பட்டதாகவும், எல்லாத்தீமைகளுக்கும்காரணமாயிருக்கின்ற இக்குடியை ஒழிப்பது மிக்க கஷ்டமான காரியமென்றும், குடியை ஒழிப்பதால் கவர்மெண்டிற்கு வருகின்ற வருமானம் குறையுமென்றால் அதற்கு ஈடு செய்யத்தகுந்த வேறு வழிகளைத் தேடிக்கொள்ளுதல் அக்கவர்ன்மெண்டார் கடமையாகுமே யல்லாமல், மதுவிலக்குச்சங்கத்தார்களையும் பொதுஜனங்களையும் அக்கடமை சாரா தென்றும்; இவ்வியக்கம் பலப்பட்டவுடன் அவர் எங்கும் மறியலை ஆரம்பிக்க இயலுமென்றும், இதற்கேற்ற பிரசாரங்களை ஓயாமற் செய்து தக்க சட்டங்களை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்றுங் கூறினர்.

பர்மாவிலுள்ள ஆர்யசமாஜத்தார் மகாத்மாஜிக்கு உபாசாரப் பத்திரத்துடன் 501 ரூபாய்கொண்ட பண முடிப்பும் ஒன்று கொடுத்தனர். மகாத்மாஜி அவ்வுபசாரத்திற்குத் தக்க பதில் அளித்தார்.

***

ஆப்கானிஸ்த்தானத்தின் நிலைமையைப்பற்றிச் சரியான வதந்திகள் கிடைப்பது அருமையாயிருக்கின்றது. பாச்சா சாகோ காயப்பட்டிருப்பதாகச் சிலர் கூறுகின்றனர். ஜபல்ரஸ்சிராஜ் கோட்டையைக் குலாம் ரசூல் கைப்பற்றியபோது பாச்சா சாக்கோ கைதியாய் விட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

***

கூச்பீகார் மகாராணியின் களவுபோன நகைகள் எல்லாம் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. ஏழுபேர்மீது இத்திருட்டுக்குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. அவர்களில் ஐவர் அகப்பட்டிருக்கின்றனர். இன்னும் இருவர் பிடிபடவில்லை.

***

அமெரிக்காவின் சில பாகங்களில் ஓயாமல் மழை பெய்து பெருவெள்ளப் பெருக்கெடுத்திருக்கின்றது. இரண்டு இரயில் வண்டிகள் வெள்ளத்தில் அழிந்து போயின. நான்கு கிராமங்கள் முழுகிப்போயின. சில பாகங்களில் நாலைந்து நகரங்களே நீரிற்குள் அமிழ்ந்து கிடக்கின்றன. 10000 பேர்கள் உணவும் பெறமுடியாது மிகவும் கஷ்டநிலையில் இருக்கின்றனர். 4000 பேர் ஆல்பா என்னும் இடத்தில் மற்றவரோடு தொடர்பற்று வெள்ளத்தினால் பிரிக்கப்பட்டுக்கிடக்கின்றனர். இறந்தவர் தொகை இன்னும் தெரியவில்லை. சிலர் கூரைகளின்மேலும் சிலர் மரங்களின்மீதும் ஏறிக்கொண்டு தம் உயிரிற்கு மன்றாடிக் கொண்டிருக்கின்றனர்.

***

ஹவானா என்னுமிடத்திலுள்ள மிகப்பெரிய கரும்புத் தோட்டத்தில் தீப்பற்றி எத்தனையோ ஆயிரம் மூட்டைச் சர்க்கரையும் லக்ஷக்கணக்கான கருப்பங் கழிகளும் அழிந்துபோயின.

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## கலா நிலயம்

**1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.**

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

## வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நம் முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறோம். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதே. இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அன்பு | 0 | 1 | பொது மதம் | 0 | 2 |
| பலவகை மனிதர் | 0 | 1 | ஆருதாரம் | 0 | 2 |
| தவம் | 0 | 1 | சந்தேகம் | 0 | 2 |
| பொறுமை | 0 | 1 | கற்பு | 0 | 3 |
| இருவினை | 0 | 2 | அஸ்தபூஷணம் | 0 | 4 |
| இல்லறம் | 0 | 2 | பதினாறு பேறு | 0 | 4 |
| ஆலய வழிபாடு | 0 | 2 | என் தந்தையார் | 0 | 6 |

**மேல்கண்ட பதினைந்து புத்தகங்களும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.**

தபால் சார்ஜ் இனாம்.

**இன்றே எழுதுங்கள் !**

நவீன கதா புத்தக சாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்

189047

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)